# செம்பதாகை

மலர்: 4
இதழ்: 9
விலை ரூபா: 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு


# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலை என்ன?

ஜனாதிபதித் தேர்தலில் யூ. என். பி. யை தோற்கடிப்பதா? அன்றி மீண்டும் பதவிக்கு வர அனுமதிப்பதா? மக்களுக்கும் யூ. என். பி. க்கும் இடையில் ஒரு ஜீவமரணப் போராட்டம் நடைபெறுகிறது. இதில் தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களும் எத்தகைய பாத்திரத்தை வகிக்கப் போகின்றனர் என்பது மிக முக்கிய கேள்வியாகும்.

தமிழர்கூட்டணி பகிஷ்கரிப்பு என்று கூறி ஜே. ஆர். ரின் கோபத்திற்காளாகாது எமக்கு ஜனாதிபதித் தேர்தலில் அக்கறையில்லை எனக் கூறி தமது யூ. என். பி. ஆதரவு நிலையை ஏற்கனவே தெளிவுபடுத்தி விட்டது. ஜே. ஆர். ரும், யூ. என். பி. யும் பதவிக்கு வந்தது முதல் தமிழ்மக்களுக்குக் கிள்ளித் தெளித்த அற்ப சலுகைகளை விட, திட்டமிட்டு செய்யப்பட்ட இனவாதக் கொடுமைகள் ஏராளம். தமிழ் மக்களுக்கு எதிராக பொருளாதார அரசியல் அடக்குமுறைகளையும், தனது ஆட்சிக் காலத்தில் திட்டமிட்ட மூன்று இனக்கலவரங்களையும் யூ. என். பி. யைப்போல் வேறு எந்த அரசாங்கமும் நடாத்தி முடித்ததில்லை. யூ. என். பி. க்கு எதிரான வெறுப்பும் விரக்தியும் தமிழ்மக்களைப் பொறுத்தவரை சிங்கள மக்களின மனோநிலைக்கு எவ்வகையிலும்

## யூ. என். பி. பொதுஎதிரி இல்லையா?

குறைந்ததாகவும் இல்லை. அப்படி இருக்க தமிழர்கூட்டணி யாருடைய அபிலாஷையின் அடிப்படையில் யூ. என். பி. மீண்டும் பதவிக்கு வரும் வாய்ப்புக்குத் துணைபோகின்றது. நாம் மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறியதுபோல் யூ. என். பி. கூட்டணி வர்க்க உறவின் உச்சகட்ட வெளிப்பாடே இதுவாகும்.

தமிழ் ஈழ விடுதலை அணியும்—சுதந்திரன் பத்திரிகையும் பகிஷ்கரிப்பு கோஷம் இடுகிறார்கள். இவர்களுடன் சேர்ந்து அமெரிக்க தமிழ்ஈழ விடுதலைச் சபையும் 'பகிஷ்கரிப்பு பஜனை' பாட ஆரம்பித்துவிட்டனர். த. ஈ. விடுதலை அணியின் பிரபல நட்சத்திரமும், த. வி. கூ. யின் செயற்குழு உறுப்பினருமான சந்திரகாசன், தளபதியாருக்குச் சினமூட்டுவதில் செலவிடும் நேரத்தை தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷைகளோடு இணைத்து சிந்திக்க மறுக்கிறார். தமிழர்களின் பகிஷ்கரிப்பு தேர்தலை எவ்விதம் பாதித்து யாருக்கு உதவப்போகிறது என்பதை இவர்கள் ஏன் சிந்திக்கமறுக்கிறார்கள். தமிழ்மக்களின் பிரதான எதிரி யூ. என். பி. என சுதந்திரனும் சந்திரகாசனும் கூறுவாரேயானால் அந்த எதிரிக்குஎதிராக தமிழ்மக்கள் வாக்களித்து தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதை பகிஷ்கரிப்புக் கோஷத்தின் மூலம் திசைதிருப்புவது ஏன்? அப்படியானால் இவர்களும் அடிப்படையில் யூ என். பி. ஆதரவு சக்திகள்தான் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

குமார் பொன்னம்பலத்தின் அரசியலுடன் நமக்கு எவ்வித உடன்பாடும் இல்லையென்றாலும் கூட்டணிக்கு இல்லாத முதுகெலும்பு இந்த நேரத்தில் அவருக்கு இருக்கிறதுபோல் தெரிகிறது. அவருக்கு அளிக்கப்படும் வாக்கு விரயமான ஒன்றுதான்: ஆனாலும் இந்தத் தேர்தலை 'தமிழ் ஈழத்திற்கு மேலும் ஆதரவு' என்று நிரூபிக்கக் கூட்டணி அச்சப்படும் நிலையையும், யூ. என். பி. யை எதிர்க்க மறுக்கும் போலித்தனத்தையும் குமார் பொன்னம்பலம் அம்பலப்படுத்தி விட்டார். தமிழ் மக்களைப் பொறுத்தவரை, யூ. என். பி. யை தோற்கடிப்பது முக்கிய பணி என்று அவர் தெளிவாக வலியுறுத்தி பிரதான எதிர் அபேட்சகரை ஆதரிக்க முன்வராதவரை அவரது பங்கு பயனற்றதும் அடிப்படையில் யூ. என். பி. க்கு ஆதரவான ஒன்றாகவுமே இருக்க முடியும்.

இலங்கை மக்கள் சகலரும் இன்று முக்கியமான ஒரு கட்டத்தில் ஜனாதிபதித்தேர்தலை எதிர்நோக்குகின்றனர். கடந்த ஐந்து வருடங்களில் யூ. என். பி. யும் — ஜே. ஆர். ரும் செய்துவந்த பொருளாதார அரசியல் நடவடிக்கைகளையும், மக்கள் விரோத — ஜனநாயக விரோத — இனவாத செயல்களையும், தனிக்கட்சி — தனிநபர் சர்வாதிகாரத்தினைப் படிப்படியாக ஸ்திரப்படுத்தி வந்த வழிமுறைகளையும் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம்.

கடந்த காலங்களில் யூ. என். பி. எதிர்ப்பு அலை பெரும்பான்மை மக்கள் மத்தியில் உருவாகிய வேளைகளில் தமிழ்த்தலைவர்கள் எனப்பட்டவர்கள் யூ. என். பி. ஆதரவு நிலையை எடுத்து தேசிய முற்போக்கு ஓட்டத்திலிருந்து தமிழ் மக்களைத் தனிமைப்படுத்திய நடவடிக்கைகளையே செய்துவந்தனர். அதையே இன்றும் ஜனாதிபதித் தேர்தலிலும் செய்யமுனைகின்றனர். 'எமக்கு அக்கறை இல்லை' என்பதோ அன்றி 'பகிஷ்கரிப்பு' என்பதோ இன்றைய நிலையில் யூ. என். பி. க்குப் போதிய ஆதரவை வெவ்வேறு வழிகளில் வழங்குவது என்பதே அர்த்தமாகும்.

இன்று இலங்கை மக்களுக்கும் யூ. என். பி. க்கும் நடப்பது ஒரு ஜீவமரணப்போராட்டமாகும். இதில் தமிழ்மக்கள் உட்பட இலங்கை மக்கள் அனைவரினதும் பொது எதிரியான யூ. என். பி. யை தோற்கடிக்க மறுப்பவர்கள் மக்களின் விரோதிகளாகவே கணிக்கப்பட வேண்டியவர்களாவர். தமிழ்மக்கள் இத்தகைய அசட்டுத்தனமான யூ. என். பி. ஆதரவு அரசியலைத்தான் பகிஷ்கரிக்க வேண்டுமே அன்றி ஜனாதிபதித் தேர்தலை அல்ல. பதிலுக்கு யூ என். பி. யைத் தோற்கடிக்கக்கூடிய பிரதான எதிர் அபேட்சகரை வெற்றிபெறச் செய்யத் தமிழ்மக்கள் பெரும்பான்மை மக்களோடு இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

★

## குட்டிமணி ஜெகன் தூக்குத் தண்டனையை ரத்துச்செய்!

குட்டிமணி, ஜெகன் ஆகிய இரண்டு தமிழ் இளைஞர்களும் அரசியல் கைதிகள் என்ற வகையில் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை இரத்துச் செய்யப்படவேண்டும்.

மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசியக்கமிட்டியின் செயலாளர் தோழர்கே. ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார்

மேலும் அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, தற்போது தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள குட்டிமணி, ஜெகன் ஆகிய இரு இளைஞர்களும் தமிழ்மக்களின் விடுதலைக்கென்று பின்பற்றிய கொள்கைகளையும் வழிமுறைகளையும் எமது கட்சி எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை வேறுபட்ட கொள்கைகளையும், நடைமுறைகளையும் பின்பற்றும் அரசியல் கைதிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதையோ அன்றி கொடும் சித்திரவதைகள் பிரயோகிக்கப்படுவதையோ கம்யூனிஸ்டுகளாகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

எனவே அவ்விரு இளைஞர்களுக்கும் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச்செய்ய வேண்டும் என எமது கட்சி வற்புறுத்துகிறது அத்துடன் விசாரணைக்கு உட்படுத்தாமலும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமலும் சிறைகளிலும், இராணுவ முகாம்களிலும் அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலைசெய்ய வேண்டும் எனவும் நாம் வற்புறுத்துகின்றோம்.

அத்துடன் அரசியல் காரணங்களுக்காக பாவிக்கப்பட்டுவரும் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நடைமுறையில் இருந்து நீக்கிவிடும்படியும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எமது கட்சியின் வாழ்த்து

மத்திய கமிட்டி,
சீனக் கம்யூனிஸ்ட் கட்சி,
பீக்கிங்
மக்கள் சீனக் குடியரசு.

அன்புள்ள தோழர்களே!

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக் கமிட்டி, அதன் சகல கட்சி அங்கத்தவர்களின் சார்பில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 12 வது காங்கிரசிற்கும் அதன்மூலம் சீன மக்களுக்கும் தனது மனமுவந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசான மக்கள் சீனக் குடியரசை நிறுவியதன் பின்னர் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி புதிய ஜனநாயகத்திலிருந்து சோசலிசத்திற்கான அமைதியான மாற்றத்தைச் செயற்படுத்துவதில் மக்கள் அனைவரையும் வழி நடத்தியது.

மார்க்சிச — லெனினிசத்தின் உலகளாவிய உண்மைகளை ஸ்தூல நிலைமைகளுக்கேற்ப சீனப்புரட்சியில் நடை

(8-ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலும் அந்நியப் பணமும்

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் முன்னர் அவ்வப்போது இப்பகுதியில் சுட்டிக்காட்டி வந்திருப்பதுபோல, மேலாதிக்க வல்லரசுகளின் போட்டாபோட்டியும் உக்கிரமடைந்து வருகிறது. ஆட்சியிலிருக்கும் யூ. என். பி. யும், அதன் ஊன்றுதடிகளான தமிழர்வியாபாரக் கூட்டணித் தலைமையும், தொண்டமான் கும்பலும் எப்பொழுதுமே முதலாளித்துவ வர்க்கத்தின் செல்லப்பிள்ளைகளாக இருந்து வந்திருப்பதால் அமெரிக்க நிறுவனங்களின் ஆதரவு அவற்றுக்கு உண்டு. தமிழர் வியாபாரக் கூட்டணிக்கு, அது தமிழரசுக் கட்சியாக இருந்த காலத்திலேயே வட்டுக்கோட்டை அமெரிக்க மிசனரிமார்மூலமாக கொடுக்கல்கள் நடந்துவந்ததை விஷயமறிந்தவர்கள் நினைவுகூருவார்கள்! இப்பொழுது தலைமையின் உச்சியில் இருப்பவர்களுக்கு இது புதிய சங்கதி அல்ல. யூ.என்.பி. கோடிக்கணக்கில் எதிர்வரும் தேர்தலில் செலவழிக்கப் போகின்றது. உள்ளூர் சர்வதேச முதலாளித்துவம் அந்த நிதியை எப்படியோ வழங்கும். கூட்டணித் தலைமையை இன்று கைக்குள் வைத்திருக்கும் கொழும்புத் தமிழ் முதலாளிகள்—சுமிடோமோ — தொடர்புடையவர்கள், யூ. என். பி.க்கு வாரிவழங்குவர். மொத்தத்தில் தைவான், அமெரிக்க மேற்கு ஜெர்மன் சக்திகள் புகுந்து விளையாடும். அமிரின் தைவான் விஜயம் பயனுள்ளதாய் அமையும்.

இதற்கு மறு புறத்தில் சோவியத் சக்திகள் அமெரிக்க ஆதரவுபெற்றுள்ள யூ. என். பி.யை எதிர்க்கும் சிற்சில கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் வெவ்வேறு வகையில் ஆதரவு வழங்கும். இன்றைய உலகில் ஜனநாயகம், தேர்தல், மக்கள் வாக்குரிமை என்றெல்லாம் முதலாளித்துவ நாடுகளில் பேசப்படுவது அடிப்படையில் பெருந்தொகையான தேர்தல் நிதிகளைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகின்றன. இலங்கையில் ஒரு தேர்தலில் பங்குபற்றி நடத்த ஒரு கட்சிக்குக் குறைந்தது ஐந்துகோடி ரூபாயாவது தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் கடைசியாக நடந்த பொதுத் தேர்தலின்போது, இந்திரா காந்தியின் கட்சி சுமார் எழுபது கோடி ரூபாய் செலவு செய்தது என்று அரசியல் அவதானிகள் கணக்கிட்டுக் கூறியிருக்கின்றனர். இவ்வளவு பெருந்தொகை நிதி தேசிய சர்வதேச மூலகங்களிலிருந்தே பெறப்பட்டாக வேண்டும். இதனாலேயே மேலாதிக்க வல்லரசுகள் தவிர்க்க முடியாதபடி பல்வேறு நாடுகளின் தேர்தல்களில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. சாதாரணமாக சிறிய கட்சிகளோ, தனிநபர்களோ, தொண்டர் ஸ்தாபனங்களோ, விவசாய தொழிலாளர் அமைப்புக்களோ தேர்தல் களத்தில் இறங்கி வெற்றிபெற இயலாது. ஆகவே எதிர்வரும் தேர்தல் அல்லது தேர்தல்கள் யூ.என்.பி.க்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே நடைபெறும் பலப்பரீட்சையாக இருக்கும். அதே வேளையில், வல்லரசுகளுக்கிடையிலான பலப்பரீட்சையாகவும் நடக்கும். எனவே ஏகாதிபத்திய சார்புடைய மக்கள் விரோத — சர்வாதிகாரப் போக்குடைய—சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்கும் — யூ.என்.பி.யை தூக்கியெறிய முயலும் மக்கள் அதேவேளையில் ஒரு வல்லரசிற்குப் பதிலாக மற்றொரு வல்லரசை அணைத்துக்கொள்ளும் அபாயகரமான நிலையையும் தவிர்த்துக்கொள்வது அவசியம். கழுகு யானை இவற்றிலிருந்து தப்ப முயன்று கரடியிடம் சிக்கிக்கொள்ளக் கூடாது.

★

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# அமிரின் தலைமைக்கு ஆபத்து வளர்கிறது!

கூட்டணித் தலைமை, குறிப்பாக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கடந்த சில வருடங்களாக அரசியல் மேடைகளில் பேசும்பொழுது இடதுசாரிகளை ஏளனம் செய்வதும், இடதுசாரிக் கட்சிகள் பிரிந்தும் பிளவுண்டும் கிடக்கிறார்கள் என்று கிண்டல் செய்வதும் வழக்கமாயிருந்தது. தமிழர் வியாபாரக்கூட்டணி — யூ.என்.பி.யைப்போல உறுதியான— ஒற்றுமைப்பட்ட கட்சி என்றும் அந்த ஒற்றுமை நீடிக்க வேண்டும் என்று அமிர் உபதேசிக்காத நாள் இல்லை; மேடை கிடையாது. அரசியலில் மாற்று அணியினரை அதாவது தமக்குப் போட்டியாக வரக்கூடியவர்களை, அரங்கிலிருந்து அப்புறப்படுத்துவதிலும், அல்பிரட் முதல் தியாகராசாவரை பல தமிழ் அரசியல்வாதிகள்மீது படுமோசமான அபாண்டங்களை சுமத்துவதிலும் கதைகள்கட்டிப் பரப்பிவிடுவதிலும், முதலாளி வர்க்கத்துக்குழண்டு கொடுப்பதிலும், தமிழ்மக்களை தேசிய நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்துவதிலும் கூட்டணித்தலைமை பல வருடங்களாக ஒன்றுபட்டு இயங்கி வந்திருப்பது உண்மையே. ஆனால் அந்த ஒற்றுமைதத்துவார்த்த—கொள்கைரீதியான ஒற்றுமையல்ல.

இடதுசாரிகளான நாம் இதனை நெடுகிலும் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். தமிழ் நாட்டிலேயே 'புரட்சி' செய்தவராகப் போற்றப்பட்ட சி. என். அண்ணாதுரை வளர்த்த திராவிட முன்னேற்றக்கழகம் கலைஞர் கருணாநிதி தலைமையில் இருந்தபோது பிளவுபட்டது, தமிழர்கட்சி என்பதற்காக அது பிளவுக்கு அப்பாற்பட்டது என்பது அர்த்தமல்ல. கலைஞரிடம் கட்சிக் கணக்குக் கேட்டுத்தான் நடிகர் புதியகட்சியை ஸ்தாபிக்க நேரிட்டது. அதன்பின் நடிகர் 'மலையாளி' என்று இனவாதத்தின் எல்லைக்கே சென்றார் கலைஞர் கருணாநிதி.

இப்படி 'தமிழ்க் கட்சிகள்' இந்தியாவில் படும்பாட்டை நாமெல்லாரும் நன்கு அறிவோம்; எனவே தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, வியாபாரக்கூட்டணி என்பன தமிழ், தமிழினம் என்பவற்றைக் கூவி விற்று அரசியல் வியாபாரம் பண்ணுவதற்குத் தோன்றியவை என்பதை இப்பொழுது தமிழ்மக்கள் இலேசாக உணரத்துவங்கி விட்டனர்.

அசைக்க முடியாத 'தமிழர் கூட்டணி' என்று தள(ர்)பதியார் வருணித்த அணி வெளித்தோற்றத்துக்கு பலம் வாய்ந்ததாகவும், ஒற்றுமை வாய்ந்ததாகவும் காணப்பட்டு வந்திருப்பினும், மற்றைய முதலாளித்துவ இனவாதக்கட்சிகள்போலவே இதனுள்ளும் தனிநபர் போட்டிகளும், குழு மனப்பான்மையும் உள்ளார்ந்தரமாக இருந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், அமிர்குடும்பத்தின் சர்வாதிகாரம் கட்சியை அடக்கியாண்டு வந்தது. "ஆண்டபரம்பரை" என்பதற்கு அமிர், 'ஆளும்பரம்பரை' என்று அர்த்தம் கூறும் வகையில் நிலைமை வளர்ந்தது. அது இப்பொழுது உள்முரண்பாடுகளை வெளிக்கொணரும்வகையில் வெடிப்புக் காட்டியுள்ளது.

நாம் இப்பகுதியில் அடிக்கடி கூறி வந்திருப்பதைப் போல, தமிழ்ப் பகுதிகளில் தன்னை ஒரு 'குட்டிஜே.ஆர்.' என எண்ணிக்கொள்ளும் அமிர்தலிங்கத்தார் ஜே ஆர். ஜனாதிபதியாக இருந்துகொண்டு அரச உபசாரங்களையும், மாட்சிமைகளையும், பெறுவதுபோல தானும் தன்னிகரில்லாத் தனிப் பெருந்தலைவனாய் எதுவித எதிர்ப்புமில்லாமல் பவனி வர வேண்டும் என்று விரும்பினார். எம்.பி.க்களையே எடுத்தெறிந்துபேசி நடத்தினார். தனக்குப்பின் தன்மகன் எனக் கனவு கண்டுகொண்டிருந்தார் அதற்கு யூ.என்.பி.த் தலைமையும் தூபம் போட்டது. அதிகாரவெறி தலைக்கேறினால் அது அவதந்திரமாக மாறும். அதுவே இப்பொழுது அமிருக்கு நடக்கத் துவங்கியுள்ளது. கட்சியில் தனிநபர் ஆட்சி கூடாது; கூட்டாட்சி அல்லது குழு ஆட்சி வேண்டும் என்று நவம் சிவசிதம்பரம், பண்டிதர் முதலிய பெருந்தலைகள் ஒருவாறு துணிந்துபேசத் துவங்கியுள்ளனர். கடந்த இரண்டு வருடங்களாக வாய்பேசாத சிலர் இப்பொழுது பேச ஆரம்பித்திருக்கின்றனர்.

இவ்வெதிர்ப்புக்குரல் தற்சமயம் சந்திரகாசன் வடிவத்தில் செயற்படுகிறது, இடதுசாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். வில்சன், நீலன், குமார்பொன்னம்பலம் வகையறாக்களைப்போல, சந்திரகாசனும் கொழும்புப் பிள்ளைதான். மெருகேறிய முதலாளித்துவ சூழலில் வளர்க்கப்பட்டவர்; ஆயினும் குறைந்தபட்சம் முதலாளித்துவ நேர்மையையாவது கடைப்பிடிக்க முயன்று வருகின்றார் எனலாம். அமிர்தலிங்கத்தாரைப் போல, ஜனாதிபதியிடம் நல்ல பெயரும் பாராட்டும் பெறுவதற்காக எதையும் விட்டுக் கொடுக்கும் மனோபாவம் சந்திரகாரனிடம் இல்லை என்பது கூட்டணி அனுதாபிகளின் அபிப்பிராயம். இன்று மிகச் சிக்கலான நெருக்கடியை அமிர் எதிர்நோக்குவது வெளிப்படை. இதிலிருந்து ஜே.ஆர்.தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்,

★

# பாரதியைநினைக்க மறுக்கும் கூட்டணித் தலைமை

இந்த வருடம் தமிழ் உலகம் அமரகவிசுப்பிரமணிய பாரதியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. தமிழ்நாட்டில் அரசுமட்டத்திலும், அனைத்துக்கட்சி மட்டத்திலும் பலவிதமான வைபவங்கள் நடாத்தப்படுகின்றன. நமது நாட்டிலும் கணிசமான அளவில் விழாக்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றைக் கூர்ந்து கவனித்தால் தமிழர்கூட்டணியினர் இவ்வருடம் பாரதி நூற்றாண்டு நிறைவை அத்துணை ஈடுபாட்டுடனும் உற்சாகத்துடனும் கொண்டாடுவதாகத் தெரியவில்லை. 'உடல்மண்ணுக்கு; உயிர் தமிழுக்கு' என்று ஒரு காலத்தில் இளம்பிள்ளைகளுக்குச் சுலோகம் சொல்லி கொடுத்த தள(ர்)பதிகள் தம்பிகள், உணர்ச்சிக் கவிஞர்கள், சுதந்திரப் பறவைகள், பண்டிதர்கள் தமிழுக்கு வலுவும், வனப்பும், வாழ்வும் அளித்த மகாகவி பாரதியின் பெருமையை பேச இப்பொழுது தயங்குவது கூட்டணி ஆதரவாளர்களுக்கே விளங்காத புதிராக இருக்கிறதாம். தமிழ்க்காங்கிரஸ் காலத்திலிருந்து பாரதியின் பாடல்கள் முழங்காத தமிழ் அரசியல் கட்சிக் கூட்டங்கள் இல்லை, அப்படி இருக்க இப்பொழுது மௌனம் ஏனோ? ஆலாலசுந்தரம் போன்ற இரண்டொரு குளறிகள் சில பாரதி விழாக்களில் குரல் கொடுத்தாலும் கூட்டணியின் பெரிய பீரங்கிகள் இவ்வருடம்முழங்கவில்லை.

'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று கர்ச்சித்த கவியின் குரல் ஏகாதிபத்திய—முதலாளித்துவ அரவணைப்பிலே இன்று சுகித்திருக்கும் கூட்டணித் தலைமைக்கு ஆகாததாயிருக்கலாம். பாரதியின் உண்மைச் சொரூபம் அவர்களுக்கு அச்சம் கொடுப்பதாய் இருக்கலாம்: அல்லது கோவைமகேசனையும், ஈழவேந்தனையும், டாக்டர் தர்மலிங்கத்தையும் திட்டித் தீர்ப்பதற்கே நேரம் இல்லாதிருக்கும்போது பாரதியைப்பற்றி எங்கே பேசுவது என்று விட்டிருக்கலாம். அல்லது இடதுசாரிகள் போற்றும் பாரதியை சுத்தத் தமிழராகிய நாம் ஏன் போற்ற வேண்டும் என்று கைவிட்டிருக்கலாம். அல்லது, அநாவசியமாகப்பொது மேடைகளுக்கு ஏன் போகவேண்டும் என்று புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதாயிருக்கலாம். பிரதமர் முதலிய பெருமக்கள் சகிதம் சுவர்ணமுகிபோன்று விலை உயர்ந்த டிக்கெற்றுக்களுக்கு நடனமாடும் நட்சத்திரங்களின் நிகழ்ச்சிகளுக்கு போவதே பெருமை என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். அல்லது நமது அரசின் ஆதரவுடன் அமைச்சர் இராசதுரை தான் பாரதிவிழாவை கொண்டாடி முடித்துவிட்டாரே; அதற்குமேல் என்னவேண்டிக்கிடக்கு என்று எண்ணக்கூடும் அல்லது தமிழ் இளைஞர்கள் போற்றும் கவிஞனை 'பழுத்த தலைவர்களான நாம் எதற்கு தீண்டவேண்டும் என்று கருதியிருக்கலாம். இன்னும்பார்த்து முடிக்கவேண்டிய வெளிநாடுகள் எத்தனையோ இருக்க— உலகமெலாம் சுற்றுலாபோக வேண்டியிருக்க — பாரதி விழாக்களோடு யார் மாரடிப்பது என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கலாம், இன்னும் எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். யார் கண்டார்? ஆனால் கூட்டணி பாரதி நினைவை மறக்க விரும்புகிறது என்பதுமட்டும் எவருக்கும் தெளிவாகத் தெரிகிறது.

★

3-ம் பக்கத் தொடர்)

பும் ஒரு சிலரே உதயநகர்ப் பகுதியிலிருந்து தோட்டத் தொழிலாளர்களை அப்புறப்படுத்தி அப்பகுதியை அபகரிக்க முயற்சிகள் செய்கின்றனர். இவர்கள் சிங்களவர்கள் அல்லர்; சுத்தத் தமிழர்கள்; தமிழர் கூட்டணியின் விசுவாசமானவர்கள், இந்த விடயத்தில் இனப் பாசம், இன ஒற்றுமை எல்லாம் தளர்ந்து இந்திய வம்சாவழி மக்களை ஏளனம் செய்யும் நிலைக்கு வந்துள்ளனர். இதை சாதாரண தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே வெந்த புண்ணில் வேல்பாய்ச்சாது நம்பிக்கையோடு வடக்கு நோக்கி வந்து அரசகாணிகளில் குடியேறியுள்ள இந்திய வம்சாவழி மக்களின் வாழ்வுக்கு சகலவித உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்வது நல்லெண்ணம்கொண்ட சகலரதும் கடமையாகும்.

## அடுத்த இதழில்

**இரு ஆய்வுக் கட்டுரைகள்:**

★ ஜே. வி. பி.யும் அதன் அரசியல் தோற்றமும் ... தேசபக்தன்

★ சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? — இராவணு

# தமிழர் கூட்டணியின் தப்புத் தாளங்கள்!

'போ'ரில் தன் மகன் புறமுதுகிட்டு மாண்டான் என்று கேள்விப்பட்டது உண்மையானால் அவனுக்கு பால் ஊட்டிய முலையை அறுத்தெறிவேன்' என்ற புறநானூற்றுத் தமிழ் மறச்சியைப் பற்றி நம் த.வி.கூ. தலைவர்கள் பேசத் தவறாத காலமும் ஒன்று இருந்தது. தளபதியாருக்கு அப்படியொரு வீரத்தாய் இருந்து அவரது வீரசாகசங்களை எல்லாம் இறுதிவரை பார்த்துக்கொண்டிருக்க நேரிட்டால் அந்தப் பெண்மணிக்குப் பிறவியில் ஆயிரம் முலைகள் இருந்திருந்தாலும் போதுமோ தெரியாது.

ஜனாதிபதித் தேர்தலையொட்டிய சட்டமூலத்திருத்தம்பற்றிய பாராளுமன்ற விவாதத்தில் த.வி.கூ. பங்குபற்றவில்லை! ஏன்? கோட்டை பாராளுமன்றத்தின் கோலாகலத்திறப்பில் கொலுவீற்றிருக்கப்போன பொம்மைகளுக்கு மானமும், ரோஷமும் புதிதாக வந்துவிட்டதாக யாரும் நினைக்கவேண்டாம். இது வழமையான அவர்களது 'ஸ்டண்ட்'.

இப்போது த.வி.கூ.க்கு 'பொலிற்பீரோ' ஒன்று வரக்கூடும். இதனால் மேற்கொண்டு த.வி.கூ ஜனநாயக முறையில் இயங்கும் என்றும் சிலர் நினைக்கலாம். த.வி.கூ. தலைமை இதுவரை காலமும் ஜனநாயகமுறையில் இயங்கவில்லை என்பதற்கு இது ஒரு சாட்சி. த.வி.கூ.யின் 'கச்சேரியில் பாட்டு அமிர்தலிங்கம். தவில் தருமலிங்கம், நாயனம் நவரத்தினம், ஒத்து ஊதல் சிவசிதம்பரம், பன்னீர் கொண்டுவந்து வைக்க —சம்பந்தன் என்கின்ற மாதிரி ஏதாவது ஏற்பாடு நடக்கும். கச்சேரிக்குப் பணம் கொடுக்கிறவர் ஜே. ஆர். ஆகவே சனங்கள் எதிர்பார்க்கிற மாதிரி கச்சேரி அமையாது. வித்துவான்களுக்கும் வயது ஏறிக்கொண்டு போகிறது. சனங்களுக்கும் அலுப்புத்தட்டத் தொடங்கிவிட்டது. சனங்களுக்கும் பிடித்தமான மாதிரியும் பணம் கொடுக்கிறவருக்கு மனம் குளிர்கிற மாதிரியும் ஏதாவது பாட இவர்களால் முடியுமோ தெரியாது. கல்லெறி விழாமல் தப்பித்தால் அதுவே பெருகும் காரியம்.

★

# பல்கலைக்கழக பகடிவதை

வருஷாவருஷம் ராக்கிங் என்கிற பகடிவதை அநாகரிகச் செயல்கள் எல்லாப் பல்கலைக்கழக வளாகங்களிலும் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்புப் பொதுமக்கள் மட்டக்களப்பு வளாக நிகழ்ச்சிகளைப்பற்றி மிகுந்த கண்டனம் தெரிவித்துள்ளார்கள். மாணவர்சங்கத்தலைமை 'ராக்கிங்' எதுவுமே நடக்கவில்லை என்றும் பொதுமக்கள் பொறுப்பின்றி பேசுவதாகவும் அறிக்கை விடுத்துள்ளது. ஆனால் பொதுமக்கள் சம்பவங்களைக் கற்பனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. அவர்களது கண்டனம் நியாயமானதே. மாணவர்களில் பெரும்பாலானோர் இந்த அநாகரிகத்தில் சம்பந்தப்படவில்லை என்பதும் உண்மை. ஆனால் ஒரு சிலர் மிகவும் கீழ்த்தரமான ராக்கிங் சேட்டைகளில் இறங்குவதை மூடிக்கட்டுவதால் யாருக்கும் நன்மை இல்லை. மாணவர் தலைமை சம்பவங்களைப்பற்றித் தீர விசாரித்த பின்பு அறிக்கைவிடலாம். 'ராக்கிங்' செய்யும் சில சமூக விரோத வாலிபர்களை நிபந்தனையின்றிக் கண்டிப்பதால் மாணவர் ஒற்றுமை குலைந்துவிடாது. மாறாக மாணவர் சங்கம் மக்கள் மதியில பெரும்செல்வாக்கை அடைய வழிகிடைக்கும். 'ராக்கிங்' அநாகரிகத்தை நிறுத்தும் நடவடிக்கைகளில் மாணவர் சங்கத்தலைமை தீவிரமாக ஈடுபடாமல் பொதுமக்களைக் குறைகூறுவது பயனற்றது.

ஜே. வி. பி. யினர் பலம் அதிகமாகவுள்ள பல்கலைக்கழகங்களில் ராக்கிங் வழமைபோல் நடைபெறுகிறது. ராக்கிங் செய்வோரைத் தடுத்துநிறுத்தவோ புதிய மாணவர்கட்கு பாதுகாப்பளிக்கவோ ஜே.வி.பி. மாணவர் தலைமைக்கும் மற்றப் பாராளுமன்றக் கட்சி மாணவர் தலைமைகட்கு மிடையில் இந்த விஷயத்திலும்கூட ஒருவித வேறுபாடும் இல்லை என்று தெளிவாகிவிட்டது. ('970 இல் சில வளாகங்களில் ஜே. வி. பி. யினர் பகிரங்கமாகவே 'ராக்கிங்' வதைகட்கு எதிராகச் செயற்பட்டது குறிப்பிடத்தக்கது)

★

# தேர்தல் பகிஷ்கரிப்பு

ஜனாதிபதித் தேர்தலை ஊக்கத்துடன் பகிஷ்கரிப்பது அல்லது அசட்டை செய்வது என்கிற முடிவுக்கு த.வி.கூ. வரலாம் என்பது யாரும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே. ஜனாதிபதித் தேர்தலில் ஜே. ஆரை ஆதரியுங்கள் என்று வெளிப்படையாகக் கூறமுடியாத பட்சத்தில் இந்தப் பகிஷ்கரிப்பு ஆயுதம் இவர்களுக்குப் பயனுள்ள ஒன்று. தமிழ்மக்களிடையில் உள்ள யூ.என்.பி. ஆதரவு சக்திகள் எப்படியும் யூ. என். பி. கட்சிக்கு விரோதமாக வாக்களிப்பது உறுதி. ஆகவே பகிஸ்கரிப்பு கோஷம் யூ.என். பி. விரோத சக்திகளை பலவீனப்படுத்தவே உதவும். தொடர் தொடராக இவை ஒடுக்குமுறை வன்முறைகளை அவிழ்த்துவிடும். யூ. என். பி. ஆட்சியை இம்முறை முறியடிக்காவிட்டால் அதன் விளைவுகளை இன்னும் நீண்டகாலத்திற்கு தமிழ்ப்பேசும் சிறுபான்மையினர் அனுபவித்தே தீர நேரிடும். ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிக்கச் சொல்வோர்; நேர்மையாளர்கள் என்றால் பாராளுமன்ற தேர்தலையும் பகிஷ்கரிக்கச் செய்யட்டுமே! பாராளுமன்ற மாவட்டசபைப் பதவிகளை விட்டுவிலகி மக்கள் மத்தியில் வந்து பகிஸ்கரிப்புப் போதனைகளை தொடங்கலாமே!

★

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

அவதானி

# காங்கேசன் சீமெந்து ஆலையின் மூன்றும் திட்டத் தொழிலாளர்கள் எங்கே செல்வது?

காங்கேசன்துறை சீமெந்து ஆலையின் மூன்றும் திட்டப் பகுதியில் வேலை செய்துவந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தற்போது நிர்க்கதிக்க ஆளாகி உள்ளனர். தமது உதிரத்தையும், வியர்வையையும் உரமாக்கி உருவாக்கிய மூன்றும் திட்டப்பகுதியிலிருந்து வீதிக்குத் துரத்தப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். ஏற்கனவே பலர் அற்ப சொற்ப காரணங்களைக் காட்டித் துரத்தப்பட்டும் உள்ளனர். 1979ம் ஆண்டிலிருந்து அபிவிருத்தி சங்கங்களின்மூலமாகவும் வேலைவங்கிமூலமாகவும் இத்திட்டத்தில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு ஆலை நிர்வாகமோ அன்றி அரசோ தொடர்ந்தும் வேலை உத்தரவாதத்தை வழங்காது விஷயத்தை தட்டிக்கழித்து வருகின்றன.

இத்தொழிலாளர்கள் கடும் உழைப்பாளிகளாகவும், வடபகுதியின் பல ஊர்களைச் சேர்ந்தவர்களாகவும் மட்டுமன்றி கடந்த மூன்று வருடங்களாக வேலை செய்து நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர்களாகவும் உள்ளனர். அபிவிருத்திச் சங்கங்கள் மூலமாகவோ அன்றி வேலைவங்கி மூலமாகவோ வேலைசெய்துவந்த மூன்றும் திட்டப்பகுதித் தொழிலாளர்களுக்கு சீமேந்து ஆலையின் நிர்வாகத்துக்குட்பட்ட எந்தப் பகுதியிலாவது நிரந்தர வேலை கொடுப்பதே நியாயமாகும். இதை நிராகரித்து அரசியல் நோக்கம், லஞ்ச முயற்சி, உயர் அதிகாரிகளின் செல்வாக்கு, இனக்குரோத அடிப்படை, பழிவாங்கும் திட்டம், நிர்வாகத்திற்கு காக்கா பிடிக்கும் நடைமுறை போன்றவற்றின் மூலமாக ஏற்கனவே உள்ள தொழிலாளர்களை வஞ்சித்துவிட்டு புதிய நியமனங்களைச் செய்வது மிகப்பெரும் அநீதியும் துரோகமும் ஆகும்.

தமது உழைப்புசக்தியை மிகவும் குறைந்த சம்பளத்திற்கு விற்றே மூன்றும் திட்டப்பகுதியில் தொழிலாளர்கள் வேலை செய்தனர். இதுவரை அப்பகுதியில் பன்னிரண்டு தொழிலாளர்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர். இதில் எத்தனைகுடும்பங்கள் முழுமையான நஷ்டஈட்டைப்பெற்றன என்பது கேள்விக்குறியாகும். மேலும் பல தொழிலாளர்கள் கை, கால்களை இழந்து படுகாயங்களுடன் இருக்கும் அவல நிலைக்கும் தள்ளப்பட்டனர். இத்தனை அவலங்களை தொழிலாளர்கள் அனுபவித்த அதே வேளை கல்மனம்கொண்ட உயர் அதிகாரிகள் தான் தோன்றித்தனமாக தொழிலாளர்களுடன் நடந்துகொண்டனர். இன்றும் அது தொடருகின்றது உயர்நிர்வாக அதிகாரிகள் சிங்களவராகவோ அன்றி தமிழராகவோ இருப்பதுபற்றி ஆட்சேபனை இருக்க முடியாது. ஆனால் ஒரு அபிவிருத்தித் திட்டத்தில் வேலை செய்யும் சாதாரண தொழிலாளர்களின் உண்மை நிலைமைகளையும், அபிலாஷைகளையும் புரிந்து செயல்படக் கூடியவர்களாக இருப்பதே அவசியமாகும். இந்த வகையில் மூன்றும் திட்டப் பகுதிக்கு பொறுப்பான ஓரிரு உயர் அதிகாரிகள் தொழிலாளர்களின் நம்பிக்கைக்கு கடுகளவேனும் இடம் வைக்காத வகையில் அதிகாரத் திமிருடன் நடந்து வருகின்றார்கள். இதைவிட்டு தொழிலாளர் நலன் விரும்பும் சகலரும் தமது கண்டனத்தைத் தெரிவிப்பது மிக அவசியமாகும்; அத்துடன் மூன்றும் திட்டப் பகுதியின் தொழிலாளர்களை சாட்டுகள்கூறி வெளியில் துரத்துவதை கைவிட்டு அவர்களுக்குத் தொடர்ந்தும் நிரந்தரவேலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை சகல தரப்பு ஸ்தாபனங்களும் மக்களும் ஆலை நிர்வாகத்தையும் அரசையும் வற்புறுத்துவது அவசியமாகும். ★

# கரன் தொழிற்சாலையில் தொழிலாளர் வேலைநீக்கம்!

யாழ்ப்பாணத்தில் உள்ள கரன் என்ஜினியரிங் கம்பனி என்ற வெல்டிங் லேத் தொழிற்சாலையில் இருந்து பத்துத் தொழிலாளர்கள் கடந்த 13-6-82இல் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதற்குக் காரணம் தொழிலாளர்கள் முன்வைத்த மூன்று கோரிக்கைகளேயாகும்:-

1) தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளியான ந. நகுலேஸ்வரனை எதுவித நிபந்தனையுமின்றி மீண்டும் வேலைக்கு எடுக்கவேண்டும்.

2) விசாரணையின்றித் தொழிலாளர்களைத் தண்டிப்பதை நிறுத்தவேண்டும்.

3) தொழிலாளர்கள்பழிவாங்கப்படுவது நிறுத்தவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளைக் கண்ட முதலாளி பத்துத் தொழிலாளர்களையும் வேலைநீக்கம் செய்தார். இத்தொழிற்சாலை தொழிற்சட்டங்களை துச்சமாக மதித்துத் தொழிலாளர்களிடம் வேலை வாங்குவதில் பெயர் பெற்ற ஒன்றாகும். குறைந்தசம்பளம் கூடிய நேரவேலை, மேலதிக வேலைக்கு நிர்ப்பந்தம் அதற்கான சம்பளம் சதக்கணக்கில் மிரட்டல்கள், முதலாளிக்கு சேவகம்செய்ய நிர்ப்பந்தித்தல் போன்றவை அத்தொழிற்சாலையின் அன்றாட நடைமுறைகளாகும். இந்த அநீதிகளை எதிர்த்து தொழிற்சங்கரீதியில் நியாயம் கேட்கமுற்பட்டதே தொழிலாளர் செய்த குற்றம். எனவே வேலைநீக்கம் செய்யப்பட்ட மேற்படி தொழிலாளர்களுக்கு உடன் வேலை வழங்க வேண்டும் எனவும் அவர்களது நியாயமான கோரிக்கைகள் வழங்கப்பட வேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம்.

கிளிநொச்சி உதயநகர்

# இந்திய வம்சாவழியினரை அப்புறப்படுத்த கடும் முயற்சி!

1977ம் ஆண்டினதும் அதைத் தொடர்ந்த இரண்டு இனவாத வன்செயல்களாலும் கடும்பாதிப்புற்று உடுத்த உடைகளுடன் மட்டும், வடக்கு நோக்கி வந்த இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் நாடற்றவர்கள் என்ற நீண்டகாலப் பட்டத்துடன் அகதிகளென்ற புதிய பட்டத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறு அகதிகளாக்கப்பட்டவர்களில் சமார் 500 குடும்பங்கள்வரை கிளிநொச்சியிலுள்ள அரசாங்கக் காணிகளில் சிறு சிறு குடிசைகள் அமைத்து தமிழ்மக்களின் பிரதேசத்திலாவது நிம்மதியுடன் வாழ முடியும் என்ற நம்பிக்கையுடன் வாழ ஆரம்பித்தனர். கிளிநொச்சி பஸ் டிப்போவுக்கு அண்மித்த உதயநகர் பகுதியிலேயே இம்மக்கள் காடுகளை வெட்டித் தமது இருப்பிடங்கை அமைத்துக்கொண்டனர். அன்று அகதிகளுக்கு வாழ்வளிக்கின்றோம் என்று இனப்பாசம் காட்டிய 'சீமான்கள்' இன்று அம்மக்களை அப்பகுதியில் இருந்து அகற்றிவிடப்படாத பாடுபடுகின்றனர். காடு வெட்டி வீடமைத்து கிணறு வெட்டி சிறுபயிர் செய்து ஓரளவுதானும் நிம்மதியாக வாழமுற்பட்டுள்ள வேளையில் தான் இப்புதிய சோதனையை கிளிநொச்சி உதயநகர் இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

இத்தொழிலாளர்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு கூறப்படும் காரணம் விசித்திரமானதாகும். அதாவது அவ்விடத்தில் மாதிரிக்கிராமம் உருவாக்க இடம் தேவை என்பதாகும். கிளிநொச்சியில் ஏராளம் அரசகாணிகள் பல ஏக்கர் கணக்கில் இருக்கும்போது இவ் அவலப்பட்ட மக்கள் வாழும் உதயநகர்ப் பகுதி தான் மாதிரிக்கிராமத்துக்கு வேண்டுமா? மேற்படி கூறப்படும் காரணத்திற்கு ஒரு நியாயம் இருக்கவேண்டும் அல்லவா? இம்மக்களை அப்பகுதியிலிருந்து அகற்ற கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினரும் உடந்தையாக உள்ளாரா? அல்லது அவருக்கு இவ்விடயம் தெரியாதா? அப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தவும், அரசியல் செல்வாக்கு பெறவும் விரும்

(2-ம் பக்கம் பார்க்க)

**தத்துவம் கற்போம்**

# நடைமுறை பற்றி

**மாஓ சேதுங்**

## சென்ற இதழ் தொடர்ச்சி

**அறிவு** என்பது விஞ்ஞானம் தழுவிய ஒரு விஷயம் இதில் நேர்மையீனமோ, செருக்கோ அனுமதிக்க முடியாதவை. இதில் உண்மையில் தேவையானது இவற்றுக்கு எதிரானவை — நேர்மை, அடக்கம் — ஆகும். நீங்கள் அறிவு பெற விரும்பினால் யதார்த்தத்தை மாற்றும் அனுஷ்டானத்தில் பங்குபற்ற வேண்டும். பேரிக்காயின் சுவையை அறிய விரும்பினால் அதை நீங்கள் சொந்தமாகத் தின்று அதை மாற்றவேண்டும். அணுக்களின் உள்ளமைப்பையும், குணங்களையும் நீங்கள் அறிய விரும்பினால், அணுக்களின் நிலையை மாற்றுவதற்காக நீங்கள் பௌதிக ரசாயன பரிசோதனை செய்யவேண்டும். புரட்சியின் தத்துவமும், வழிமுறைகளும் பற்றி நீங்கள் அறியவிரும்பினால், நீங்கள் புரட்சியில் பங்குபற்ற வேண்டும். உண்மையான அறிவு முழுவதும் நேரடி அனுபவத்திலிருந்தே உதிக்கின்றது. ஆனால், மனிதன் ஒவ்வொரு விஷயத்திலும் நேரடியான அனுபவத்தைப் பெறமுடியாது. உண்மையில் நமது அறிவின் மிகப் பெரிய பகுதி நேரல்லாத அனுபவத்தில் தான் கிடைக்கிறது. பண்டைக்கால அறிவும் அந்நிய நாடுகள் பற்றிய அறிவும் இதற்கு உதாரணங்களாகும். எமது மூதாதையோருக்கும், அந்நியர்களுக்கும் அந்த அறிவு நேரடியான அனுபவத்தில் கிடைத்தது. எமது மூதாதையரதும் அந்நிய தேசத்தினரதும் நேரடியான அனுபவம் என்ற "முறையில் அந்த அறிவு விஞ்ஞானரீதியான பொதுப்படையான கருத்து"க்கு லெனின் குறிப்பிடும் நிபந்தனையைப் பூர்த்தி செய்தால் புறப்பொருட்களை விஞ்ஞானரீதியாகப் பிரதிபலித்தால், அது நம்பத்தக்கது; இல்லாவிட்டால் அந்த அறிவை நம்பமுடியாது. எனவே மனித அறிவு இருபகுதிகளை மட்டும் உடையது; நேரடியான அனுபவத்தில் கிடைப்பதொன்று, நேரல்லாத அனுபவத்தில் கிடைப்பது மற்றொன்று. எனக்கு நேரல்லாத அனுபவமாயிருப்பதே மற்றவர்களுக்கு நேரடியான அனுபவமாயிருக்கிறது. எனவே அறிவு என்பதை முழுமையாகப் பார்த்தால் எந்த வகைப்பட்ட அறிவையும் நேரடி அனுபவத்திலிருந்து பிரிக்கமுடியாது. மனிதன் தன் ஞானேந்திரியங்கள் மூலம் தன்னை சுற்றியுள்ள யதார்த்த உலகத்தை உணர்கிறான்; இதுவே எல்லா அறிவுக்கும் மூலாதாரம். ஒருவன் இந்தப் புலன் அறிவை மறுத்தால் நேரடியான அனுபவத்தை மறுத்தால் யதார்த்தத்தை மாற்றியமைக்கும் நடவடிக்கையில் நேரடியாக பங்கெடுப்பதை மறுத்தால் அவன் பொருள்முதல்வாதியல்ல. அதனால்தான் 'எல்லாம் அறிந்தவர்கள்' பரிகசிக்கத்தக்கவர்களாயிருக்கிறார்கள். 'புலியின் உறைவிடத்துக்குப்போகாமல் புலிக் குட்டிகளைக் கைப்பற்ற முடியாது' என்பது சீன முதுரை. மனிதனின் நடைமுறைக்கும், அறிவு இயலுக்கும் இந்த முதுரை உண்மையாகப் பொருந்தும். நடைமுறைக்குப் புறம்பான முறையில் அறிவு பெற முடியாது.

யதார்த்தத்தை மாற்றியமைக்கும் நடைமுறையில் இருந்து எழும் இயங்கியல்-பொருள்முதல்வாத அறிவு வளர்ச்சியை, படிப்படியாக அறிவு ஆழமடைவதை, தெளிவுபடுத்துவதற்காக, சில ஸ்தூலமான உதாரணங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

பாட்டாளிவர்க்கம் தன் நடைமுறையின் முதல் கட்டத்தில் — இயந்திரங்களை உடைப்பதும் தானாகவே எழுந்து போராடுவதுமான காலகட்டத்தில் இருந்தபோது முதலாளித்துவ சமூகத்தைப் பற்றிய அதன் அறிவு, புலன் அறிவாகவே இருந்தது; முதலாளித்துவத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளுடைய தனித்தனி அம்சங்களையும், புறஉறவுகளையுமே அது அறிந்திருந்தது. அந்த சமயத்தில் பாட்டாளி வர்க்கம், "தன்னுள் ஒரு வர்க்க"மாக இருந்தது. ஆனால், இந்த வர்க்கம் தன் நடைமுறையின் இரண்டாவது கட்டத்தை — உணர்வுடன் ஸ்தாபனத்துடன் பொருளாதாரப் போராட்டமும், அரசியல் போராட்டமும் நடத்தும்கட்டத்தை அடைந்தபோது, தன் நடைமுறைமூலமும், பாட்டாளி வர்க்கத்துக்குபோதனையளிப்பதற்காக மார்க்சும், ஏங்கல்சும் விஞ்ஞான ரீதியாகத் திரட்டித் தொகுத்து மார்க்சீசத் தத்துவமாக உருவாக்கிய நீண்டகாலபோராட்ட அனுபவமூலமும், அது முதலாளித்துவ சமூகத்தின் சாராம்சத்தையும், சமுதாய வர்க்கங்களுக்கிடையே உள்ள சுரண்டல் உறவுகளையும், தன் சரித்திரபூர்வமான பணியையும் புரிந்து கொள்ள முடிந்தது; அதன்பிறகே அது 'தனக்காக வாழும் வர்க்க'மாக ஆயிற்று.

ஏகாதிபத்தியத்தைப் பற்றிச் சீன மக்களின் அறிவு வளர்ந்தவிதமும் இதுவே. முதல்கட்டத்தில் மேலெழுந்தவாரியான புலன் அறிவே ஏற்பட்டிருந்தது. தைப்பிங் விண்ணுலக சாம்ராச்சிய இயக்கம், யிஹோதுவன் இயக்கம் முதலிய பாகுபாடு இல்லாத அந்நிய எதிர்ப்புப் போராட்டங்கள் இதற்கு உதாரணங்கள். இரண்டாவது கட்டத்தில்தான் சீன மக்கள் தர்க்கரீதியான அறிவைப்பெற்றனர்; அவர்கள் ஏகாதிபத்தியத்தின் உள், புற முரண்பாடுகளைப் பார்த்தனர்; ஏகாதிபத்தியம் சீனாவின் தரகு வர்க்கத்துடனும், நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடனும் சேர்ந்து கொண்டு சீனத்தின் பரந்த பொது ஜனங்களை ஒடுக்கிச்சுரண்டுவதின் சாராம்சத்தை அவர்கள் உணர்ந்தனர். 1919ம் ஆண்டு மே 4 இயக்க சமயத்தில்தான் இந்த அறிவு ஏற்படத் தொடங்கியது.

அடுத்து யுத்தத்தைப் பார்ப்போம், ஒரு யுத்தத்துக்குத் தலைமைதாங்கி நடத்துகிறவர்கள் யுத்த அனுபவம் இல்லாமலிருந்தால், ஒருகுறிப்பிட்ட யுத்தத்தின் (உதாரணமாக கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்த நிலப்புரட்சி யுத்தம்) தீர்க்கமான விதிகளை அவர்கள் ஆரம்ப கட்டத்தில் புரிந்து கொள்ள முடியாது. ஆரம்ப கட்டத்தில் அவர்களுக்குப் பல சண்டைகளின் அனுபவம் கிடைக்கின்றது; அவ்வளவு தான்; மேலும் பலதோல்விகளும் சம்பவிக்கின்றன. ஆனால் அந்த அனுபவத்திலிருந்து (வெற்றியடைந்த போராட்டங்களின் அனுபவத்திலிருந்தும் குறிப்பாக தோற்றுப்போன அனுபவத்திலிருந்தும்) அவர்களுக்கு முழு யுத்தத்திலும் இழையோடுவதை அந்தக் குறிப்பிட்ட யுத்தத்தின் விதிகளைப் புரிந்துகொள்ள முடிகிறது; யுத்ததந்திரம் தந்திரோபாயம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள முடிகிறது; எனவே அவர்களால் யுத்தத்தை நம்பிக்கையுடன் வழிநடத்த முடிகிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில் அனுபவமில்லாதவர் ஒருவர் தலைமையை மேற்கொண்டால், சில தோல்விகளை அடைகிற வரை (அனுபவம் பெறுகிற வரை) அவருக்கு யுத்தத்தின உண்மையான விதிகளை விளங்க முடியாது.

தன்னிடம் ஒப்படைக்கப்படும் பணியை ஏற்றுக் கொள்ளும் தைரியமல்லாத ஒரு தோழர் 'என்னால் செய்ய முடியுமோ எனக்குத் தெரியாது' என்று கூறுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அவருக்கு நம்பிக்கை இல்லாததற்கு காரணம் என்ன? என்னவென்றால், அந்த வேலையின் தன்மை சூழ்நிலை ஆகியவற்றைப்பற்றி அவருக்குமுறையான ஞானம் கிடையாது; இல்லாவிட்டால் அந்தவகை வேலையுடன் அவருக்கு அதுவரை கொஞ்சத் தொடர்பே இருந்திருக்கிறது, அல்லது அறவே தொடர்பு இல்லாமல் இருந்திருக்கிறது; எனவே அந்த வேலையின் விதிகள் அவருக்கு அப்பாற்பட்டவையாயுள்ளன. அந்த வேலையின் தன்மையையும், சூழ்நிலையையும் விபரமாகப் பகுத்தாராய்ந்தபின் அவருக்குக் கூடுதலான நம்பிக்கை ஏற்படும்; அந்த வேலையை அவர் செய்ய இஷ்டப்படுவார். கொஞ்சக் காலத்துக்கு அந்த வேலையைச் செய்த பிறகு அவருக்கு அதில் அனுபவம் கிடைத்தால், மேலும் பிரச்சினைகளைத் தன் மனப்போக்கிலோ, ஒருதலைப்பட்சமாகவோ, மேலோட்டமாகவோ பார்க்காமல், திறந்த மனதுடன் பார்க்கத் தயாராயிருந்தால், தன்வேலையை மேற்கொண்டு எப்படிச் செய்வதென்பதைக் குறித்து அவர் முடிவுகளுக்கு வரமுடியும்; அவருடைய நம்பிக்கை பெரிய அளவுக்குக் கூடுதலாகும். மானசீகமாகவும் ஒருதலைப்பட்சமாகவும் மேலோட்டமாகவும் பிரச்சினைகளை அணுகுபவர்கள் தாம் களத்திற்கு வந்த அதேகணத்தில் சூழ்நிலைகளை ஆராயாமலும், விஷயங்களை முழுமையாக (அவற்றின் வரலாற்றையும் அவற்றின் இன்றைய நிலைமையையும்) நோக்காமலும் விஷயங்களின் சாராம்சத்தை (அவற்றின் இயல்பையும், ஒரு விஷயத்துக்கும் இன்னொன்றுக்கும் இடையிலுள்ள அக உறவுகளையும்) ஊடுருவிப் பாராமலும், தாம் சரியென்று கருதிக் கட்டளைகள் அல்லது உத்தரவுகள் விடுவர். இத்தகைய நபர்கள் தடுக்கிவிழுவது திண்ணம்.

ஆக, அறிவுவளர்ச்சியின் முதல் நடவடிக்கை, புற உலக விஷயங்களோடு தொடர்புகொள்வதாகும். இது புலன் அறிவுக் கட்டமாகும். இரண்டாவது நடவடிக்கை புலன்களால் அறிந்தவற்றை மீண்டும் முறைப்படுத்துவதன்மூலம் அல்லது புனர்நிர்மாணம் செய்வதன்மூலம் ஒன்று சேர்த்தல்; இது கருத்துக்களை உருவாக்குவதும், மதிப்பிடுவதும் ஊகித்துணர்வதுமான கட்டமாகும். புலன்-அறிவு (துண்டுதுண்டாகவோ, குறைபாடுள்ளதாகவோ இல்லாமல்) மிகவும் செழுமையாகவிருந்தால்தான் (பிரமையாகவில்லாமல்) யதார்த்தத்துக்கு உகந்ததாகவிருந்தால்தான் அந்த அறிவின் அடிப்படையில் நாம் தவறற்ற கருத்துக்களையும், தத்துவங்களையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இங்கு இரு முக்கியமான அம்சங்களை வற்புறுத்த வேண்டும். முதலாவது முன்பே குறிப்பிட்டது; இங்கு திரும்பச் சொல்லவேண்டும்; தர்க்கரீதியான அறிவு புலன் அறிவைச் சார்ந்திருக்கிறதென்பதே அது. தர்க்க அறிவைப் புலன் அறிவிலிருந்து பெறத் தேவையில்லை என எண்ணுகிறவர்கள் கருத்துமுதல்வாதிகளாவர், தத்துவார்த்த வரலாற்றில் 'பகுத்தறிவுவாத'க் கோஷ்டியினர் என்பவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் காரணத்தின் உண்மையை மட்டும் ஏற்றுக் கொள்கின்றனர்; அனுபவ உண்மையை ஏற்றுக்கொள்வதில்லை; காரணம் மட்டுமே நம்பகமானது, புலன்களின் அனுபவம் நம்பத்தகாதது என்பது அவர்கள் கருத்து. விஷயங்களை தலைகீழாக புரட்டுவதே இவர்கள் செய்யும் தவறு. புலன் அறிவை மூலாதாரமாகக் கொண்டிருப்பதால்தான் பகுத்தறிவு நம்பகமானதாயிருக்கின்றது. இல்லாவிட்டால், அது தோற்றுவாய் இல்லாத தண்ணீர் மாதிரி, வேர்களில்லாதமரம் மாதிரி இருக்கும்; அகநிலைப்பட்டதாக, தானே உருவாகுவதாக, நம்பத்தகாததாக இருக்கும்' அறிவுவளர்ச்சியை வரிசைப்படுத்திபார்ப்பதென்றால் புலன் அனுபவம் முதலில் ஏற்படுகிறது; அறிவு வளர்ச்சியில் சமுதாயநடைமுறைக்குள்ள முக்கியத்துவத்தை நாம் வலியுறுத்துகின்றோம்; ஏனென்றால், சமுதாய நடைமுறை மட்டுமே மனித அறிவை ஏற்படுத்தும்; மனிதனை சுற்றியுள்ள புற உலகத்திலிருந்து புலன் அனுபவம் பெற அவனுக்கு வாய்ப்பளிக்கும். தன்கண்களை மூடிக்கொண்டு, காதுகளை அடைத்துக்கொண்டு, புற உலகத்திலிருந்து முற்றாகத் தன்னைக் கத்தரித்துக்கொள்ளும் மனிதனுக்கு அறிவு என்ற விஷயமே இருக்கமுடியாது அறிவு அனுபவத்தில் தொடங்குகிறது— அறிவு இயலின் பொருள்முதல்வாதம் இதுவே.

> ''மனிதர்களின் அறிவுணர்வல்ல அவர்களின் வாழ்வை நிர்ணயிப்பது மாறாக அவர்களின் சமூக வாழ்வே அவர்களின் அறிவுணர்வை நிர்ணயிக்கிறது''
>
> —மாக்ஸ்

இரண்டாவது அம்சம் என்னவெனில், இந்த அறிவு இனித்தான் ஆழமாக்கப்பட வேண்டும். புலன்அறிவு பகுத்தறிவாக வேண்டும் — இது தான் அறிவின் தத்துவத்தின் இயங்கியல் வாதமாகும். 4 அறிவு புலன் அறிவு என்ற தாழ்ந்த கட்டத்திலேயே நின்றுவிட முடியும் என்றும் புலனறிவுதான் நம்பத்தக்கது என்றும் பகுத்தறிவு நம்பத்தக்கதல்லவென்னும் கருதுவது சரித்திரத்திலுள்ள 'அனுபவ வாத'த் தவறை திரும்பச்செய்வதாகும். புலன்கள்மூலம் அறியப்படும் விவரங்கள் புற உலகத்தின் சில உண்மையான விஷயங்களைப் பிரதிபலித்தபொழுதிலும் (ஆத்மசோதனை எனப்படுவதே அனுபவம் என்று வரம்புகட்டும் கருத்துமுதல்வாத அனுபவவாதத்தை தான் இங்கு குறிப்பிடவில்லை). அவை துண்டுதுண்டாகவும் மேலெழுந்தவாரியாவுமே உள்ளன; விஷயங்களின் சாராம்சத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குப் பதிலாக அவற்றைக் குறைபாடுகளுடனே பிரதிபலிக்கின்றன. ஒரு விஷயத்தைப் பூர்த்தியாக, அதன் முழுமையில் பிரதிபலிக்க வேண்டுமானால், புலன்கள் மூலம் கிடைக்கும் ஏராளமான விவரங்களில் கொச்சையானதைத் தள்ளிவிட்டு, திருத்தமானதைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, பொய்யானதை அகற்றிவிட்டு, உண்மையானதை வைத்துக்கொண்டு, ஒரு அம்சத்திலிருந்து இன்னொரு அம்சத்துக்குத் தொடர்புகண்டு, புறத்திலிருந்து உட்பொருளுக்குச் சென்று புதிதாக முறைப்படுத்தி உருவாக்கிக் கருத்துக்களினதும், தத்துவங்களினதும் அமைப்பொன்றைச் சிந்தனையின்மூலம் நிர்மாணிப்பது அவசியமாகும்; புலன் அறிவிலிருந்து பகுத்தறிவுக்கு பாய்வது அவசியமாகும். இத்தகைய புனர்நிர்மாணமாகும் அறிவு, வெற்று அறிவாகவோ, நம்பத்தகாததாகவோ ஆகிவிடாது; அதற்கு மாறாக, அறிவு வளர்ச்சி நிகழ்ச்சியில் நடைமுறை அடிப்படையில் விஞ்ஞான ரீதியாகப் புனரமைக்கப்படுவதானது, லெனின் கூறிய மாதிரி, யதார்த்த விஷயங்களை மேலும் ஆழமாகவும், உண்மையாகவும், பூர்த்தியாகவும் பிரதிபலிக்கின்றது. இதற்கு எதிராக அனுபவத்துக்கு மதிப்புக்கொடுக்கும்பொழுதே தத்துவத்தை வெறுக்கும் கொச்சை 'நடைமுறைவாதிகள்' முழுமையான புற நிகழ்ச்சியைப் பற்றி அனைத்தையும் தழுவிய கருத்தோட்டம்கொள்ள முடியாது; தெளிவான திசைவழியும், நீண்டகாலக் கண்ணோட்டமும் பெறமுடியாது; தற்செயலாக ஏற்படுகிற வெற்றிகளிலும் மேலோட்டமான பார்வையிலும் ஆத்ம திருப்தி அடைகிறவர்களாயிருப்பார்கள். அவர்கள் ஒரு

(5-ம் பக்கம் பார்க்க)

# நடைமுறை பற்றி

4-ம் பக்கத் தொடர்........

புரட்சிக்குத் தலைமைதாங்கினால் அதை ஒரு முட்டுச்சந்தில் கொண்டு வந்துவிடுவார்கள்.

அறிவு சம்பந்தமான இயங்கியல் - பொருள்முதல்வாதத் தத்துவம் என்னவெனில், பகுத்தறிவு புலனறிவைப் பொறுத்திருக்கிறது என்பதும், புலனறிவு பகுத்தறிவாக வளர்க்கப்பட வேண்டுமென்பதுமாகும். தத்துவார்த்தத்தில் 'பகுத்தறிவு வாத'மோ, 'அனுபவவாத'மோ அறிவின் சரித்திர இயல்பையோ, இயங்கியல் தன்மையோ புரிந்துகொள்ளவில்லை. அவை ஒவ்வொன்றும் உண்மையின் ஒரு அம்சத்தைக் கொண்டிருந்தபோதிலும் (இங்கு நான் பொருள்முதல் பகுத்தறிவு வாதத்தையும் பொருள்முதல் அனுபவவாதத்தையுமேகுறிப்பிடுகிறேன்; கருத்துமுதல் பகுத்தறிவு வாதத்தையோ அல்லது கருத்துமுதல் அனுபவ வாதத்தையோ குறிப்பிடவில்லை) இரண்டுமே அறிவு சம்பந்தமான தத்துவத்தின் முழுமையைப் பொறுத்தமட்டில், தவறானவை. புலன் அறிவிலிருந்து பகுத்தறிவாக வளரும் இயங்கியல் - பொருள்முதல்வாத அறிவுவளர்ச்சி சாதாரண அறிவுவளர்ச்சிக்கும் (ஒரு விஷயம் அல்லது கடமையை அறிவது) பெரிய அறிவு வளர்ச்சிக்கும் (ஒரு சமூகம் முழுமையை அல்லது புரட்சியை அறிவது) பொருத்தமாகும்.

ஆனால் அறிவு வளர்ச்சி இங்கு முற்றுப் பெறவில்லை. இயங்கியல் — பொருள்முதல்வாத அறிவின் வளர்ச்சி பகுத்தறிவில் நின்றுவிடுகிறதென்பது, பிரச்சினையின் ஒரு பாதியைத்தான் விளக்கும். மாக்சிசத் தத்துவார்த்தத்தைப் பொறுத்தமட்டில், குறைந்த முக்கியத்துவம் உள்ள பகுதியே அது. புறநிலை உலகின் விதிகளைப் புரிந்து, அவற்றை விளக்குவதில் திறமை பெற்றிருப்பது மிக முக்கியமான பிரச்சினையல்ல; பதிலுக்கு, ஊக்கமாக உலகை மாற்றுவதற்கு அவ் விதிகள் பற்றிய அறிவைப் பிரயோகிப்பதுதான் மிக முக்கியமான பிரச்சினை என மாக்சிசத் தத்துவம் கருதுகின்றது. மாக்சிசக் கண்ணோட்டத்தில் தத்துவம் மிக முக்கியமானது. ''புரட்சிகரமான தத்துவமில்லாமல், புரட்சிகரமான இயக்கமிருக்க முடியாது''5 என்ற லெனின் வாசகத்தில் தத்துவத்தின் முக்கியத்துவத்தை பூரணமாகக் காணலாம். ஆனால் தத்துவம் செயலுக்கு வழிகாட்டியாக இருக்கும் ஒரே காரணத்தால்தான் மாக்சிசம் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. நாம் ஒரு சரியான தத்துவத்தைப் பெற்றிருந்தால், அதை அனுஷ்டானத்தில் பிரயோகிக்காமல், அதுபற்றி சும்மா பிதற்றித்திரிந்தால் அல்லது பூட்டி வைத்திருந்தால் அந்தத் தத்துவம் எவ்வளவு சிறந்ததாலும் அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. அறிவு என்பது அனுஷ்டானத்திலிருந்து ஆரம்பமாகின்றது. அனுஷ்டானத்தின்மூலம் சேகரிக்கப்பட்ட தத்துவ அறிவு திரும்பவும் அனுஷ்டானத்துக்கே மீள்கின்றது. அறிவின் சுறுசுறுப்பான பாத்திரம் புலன் அறிவிலிருந்து பகுத்தறிவாக மாறும் துரிதப்பாய்ச்சலில் வெளிப்படுவது மாத்திரம் அல்ல—இது மேலும் முக்கியமானது—பகுத்தறிவிலிருந்து புரட்சிகர அனுஷ்டானத்துக்குச் செல்லும் பாய்ச்சலிலும் வெளிப்பட வேண்டும். உலகத்தின் விதிகளைக் கிரகித்துள்ள அறிவை உலகத்தை மாற்றும் நடைமுறைக்குப் பயன்படுத்த வேண்டும்; அதாவது பொருளுற்பத்திச் செயலுக்கு, புரட்சிகரமான வர்க்கப் போராட்ட நடைமுறைக்கு, புரட்சிகரமான தேசியப் போராட்ட நடைமுறைக்கு, விஞ்ஞானப் பரிசோதனைக்குப், பயன்படுத்த வேண்டும். இதுவே தத்துவத்தை சோதித்து விருத்தி செய்யும் நிகழ்ச்சி, அறிவுவளர்ச்சி என்ற முழு நிகழ்ச்சியின் தொடர்ச்சி. தத்துவம் யதார்த்த உண்மைக்கு உகந்ததாயிருக்கின்றதா இல்லையா என்ற பிரச்சினை, புலன் அறிவு பகுத்தறிவாக வளரும் நிகழ்ச்சியில் பூர்த்தியாக தீர்ந்துவிடவில்லை; அதுமுழுத் தீர்வு ஆக முடியாது. இதை மேலே வர்ணித்திருக்கிறோம். இதைபூர்த்தியாக தீர்வு செய்வதற்குள்ள ஒரேவழி, பகுத்தறிவைச் சமுதாய நடைமுறைக்குப் பயன்படுத்துவதாகும். தத்துவத்தை நடைமுறைக்குப் பயன்படுத்தி, எதிர்பார்க்கும் பலன்களை அது சாதிக்குமா என்று பார்ப்பதாகும். இயற்கை விஞ்ஞானத்தின் பல தத்துவங்கள் உண்மையாகக் கருதப்படுகின்றன; இயற்கை விஞ்ஞானிகள் அவற்றைத் தோற்றுவித்த பொழுது அவை உண்மையாக கருதப்பட்டால் மட்டுமல்ல, அவை பின்னால் நிகழ்ந்த விஞ்ஞான நடைமுறையில் ருசுப்பிக்கப் பட்டிருப்பதாலுமே, அவை உண்மையானவையாக கருதப்படுகின்றன. அதுபோல மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் மார்க்சிச — லெனினிசத்தை விஞ்ஞானரீதியாக வகுத்த பொழுது அது உண்மையாக கருதப்பட்டதால் மட்டுமல்ல, பின்னால் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்திலும் தேசியப் போராட்டத்திலும் அது ருசுப்பிக்கப்பட்டிருப்பதால்தான் மாக்சிச-லெனினிஸம் உண்மையானதாகக் கருதப்படுகின்றது. இயங்கியல்-பொருள்முதல்வாதம் ஒரு பிரபஞ்ச உண்மை; எப்படியெனில், எவரும் தன் நடைமுறையில் அதிலிருந்து தப்ப முடியாது. பல தத்துவங்களின் உண்மை குறைபாடு உள்ளதாய் இருக்கிறதென்றும் நடைமுறையில் சோதனை வாயிலாகத்தான் இக்குறை நிவர்த்தியாகிறது என்றும் மனித அறிவின் வரலாறு நமக்கு எடுத்துக் கூறுகிறது. பல தத்துவங்கள் தவறானவையாக இருக்கின்றன; நடைமுறையின் சோதனையில்தான் அவற்றின் தவறு அகற்றப்படும். நடைமுறையே உண்மைக்கு உரைகல் என்பதற்கும், 'வாழ்வின் கருத்தோட்டமே, நடைமுறையின் கருத்தோட்டமே அறிவின் தத்துவத்தில் முதன்மையானதாகவும் மூலாதாரமானதாகவும் இருக்கவேண்டும்'' 6 என்பதற்கும் காரணம் இதுவே. "நடைமுறையின் பாதையில் புரட்சிகரமான தத்துவம் ஒளிவீசாவிட்டால் நடைமுறை இருளில் தடுமாறவேண்டும்; அதுபோல தத்துவம் புரட்சிகரமான நடைமுறையுடன் இணைந்திராவிட்டால், அது இலக்கற்றதாகிவிடுகிறது' 7 என்று ஸ்டாலின் செவ்வனே கூறினார்.

இந்த நிலைக்கு வந்தவுடன் அறிவுவளர்ச்சி முற்றுப்பெறுகிறதா? முற்றுப் பெறுகின்றது; அதே நேரத்தில் முற்றுப்பெறவில்லை என்பதே நமது பதில். ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட யதார்த்த நிகழ்ச்சியை (இயற்கை நிகழ்ச்சியோ சமுதாய நிகழ்ச்சியோ) மாற்றும் நடைமுறையில் சமுதாயத்திலுள்ள மனிதன் ஈடுபடும்பொழுது, தன் சிந்தனையில் யதார்த்த நிகழ்ச்சியை பிரதிபலிக்கச் செய்வதன் மூலமாகவும், தன் அகத் திறமையைச் செயல்படுத்துவதன் மூலமாகவும், தன் புலன்அறிவை பகுத்தறிவாக விருத்திசெய்து பொதுவில் யதார்த்த நிகழ்ச்சியின் விதிகளுக்குப் பொருந்திய கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிநிரல்களை வகுக்க முடியும்; பிறகு இதே புறநிகழ்ச்சியில் இந்தக் கருத்துக்கள், தத்துவங்கள் திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிநிரல்களை அவர் நடைமுறைக்குக் கொண்டு வருகின்றார். அந்த நடைமுறைமூலம் அவர் தன்னுடைய முன்யோசனையின குறிக்கோளை அடைய முடியுமானால், அதாவது இதே புறநிகழ்ச்சியில் முன்யோசனையில் வகுத்த கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிநிரல்களைப் பிரத்தியட்ச உண்மைகளாக்க முடியுமானால், அல்லது ஏறத்தாழ மெய்ப்பிக்க முடியுமானால், இந்த ஸ்தூலமான நிகழ்ச்சி சம்பந்தமான அறிவு வளர்ச்சி பூர்த்தியாகிவிட்டதெனக் கருதலாம். உதாரணமாக இயற்கையை மாற்றும் நிகழ்ச்சியில் ஒரு எஞ்ஜினியரிங் திட்டத்தின் வெற்றி, ஒரு விஞ்ஞான அனுமானம் மெய்ப்பிக்கப்படும் சாதனை, ஒரு பாத்திரம் அல்லது ஒரு கருவியின் உற்பத்தி, விவசாய விளைபொருளின் அறுவடை ஆகியவையும், சமுதாயத்தை மாற்றும் நிகழ்ச்சியில் ஒரு வேலைநிறுத்தத்தின் வெற்றி, ஒரு யுத்தத்தின் வெற்றி, ஒரு கல்வித்திட்டம் நிறைவேறும் சாதனை ஆகியவையும் முன்யோசனையின் குறிக்கோள்கள் நிறைவேறியதாகக் கருதத்தக்கவை. ஆனால் பொதுப்படையாகப் பார்த்தால், இயற்கையை மாற்றும் நடைமுறையிலும் சரி சமுதாயத்தை மாற்றும் நடைமுறையிலும்சரி, மக்களின் அசல்கருத்துக்கள் தத்துவங்கள் திட்டங்கள் நிகழ்ச்சிநிரல்கள் அப்படியே, எவ்வித மாறுதலுமின்றிக் கைகூடுவது அரிது. ஏனெனில் யதார்த்தத்தை மாற்றுவதில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அடிக்கடி பல வரையறைகள் ஏற்படுகின்றன; விஞ்ஞான தொழில்நுட்ப நிலைமைகளால் ஏற்படும் வரையறைகள் மட்டுமல்ல, புறநிகழ்ச்சியின் வளர்ச்சியாலும் அதன் வெளிப்பாட்டின் அளவாலும்கூட (புறநிகழ்ச்சியின் அம்சங்களும் சாராம்சமும் பூரணமாக வெளிப்படாத காரணத்தாலும்) வரையறைகள் ஏற்படுகின்றன. இத்தகைய நிலைமையில் நடைமுறையில் கண்டு பிடிக்கப்படும் எதிர்பாராத சந்தர்ப்பங்களால், கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிநிரல்கள் அடிக்கடி ஓரளவுக்கு மாறுதல் அடைகின்றன; சில சமயங்களில் முழுமையாக மாற்றப்படுகின்றன. அதாவது ஆரம்பத்தில் உருவான கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிநிரல்கள் ஓரளவுக்கோ முழுமையாகவோ யதார்த்தத்துக்குப் பொருந்தாதவையாகவும் தவறானவையாகவுமிருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் பன்முறை சம்பவித்த பிறகே, பிழையான அறிவு திருத்தப்பட்டுப் புறநிகழ்ச்சியின் விதிகளுக்கு உகந்ததாக ஆகிறது; அப்பொழுது மனத்தில் எழும் விஷயங்கள் யதார்த்த உண்மையாக மாற முடியும்; அதாவது எதிர்பார்த்த பலன்களை நடைமுறையில் அடைய முடியும். ஆனால், எப்படியிருந்தாலும், அந்த நிலையில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட புறநிகழ்ச்சி சம்பந்தமான மனித அறிவின் வளர்ச்சி முற்றுப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

எனினும் அவ்வளர்ச்சியின் முன்னேற்றத்தை பொறுத்தவரை மனிதனின் அறிவு வளர்ச்சி முடிவு அடையவில்லை. இயற்கை உலகத்திலாயினும் சமுதாயத்திலாயினும் ஒரு நிகழ்ச்சி தன் உள் முரண்பாடுகளாலும், போராட்டங்களாலும் முன்னேறி அபிவிருத்தி அடையும் பொழுது மனிதனின் அறிவு வளர்ச்சியும்கூட அத்துடன் முன்னேறி அபிவிருத்தியடைகிறது. சமுதாய இயக்கத்தைப் பொறுத்தமட்டில் ஒரு உண்மையான புரட்சித் தலைவன் தன் கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிநிரல்கள் தவறானவையாகக் கருதப்படும் பொழுது அவற்றை இருத்திக் கொள்வதில் தேர்ச்சி பெற வேண்டுமென்பதை நாம் முன்பே கூறியிருக்கிறோம்; அதுமட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட புற நிகழ்ச்சி ஒரு வளர்ச்சிக் கட்டத்திலிருந்து இன்னொரு வளர்ச்சிக் கட்டத்திற்கு முன்னேறிவிட்டபோது அதற்கேற்றாற்போல தானும், தன் சகாக்களாகவுள்ள புரட்சிக்காரர்களும் முன்னேறி, தமது மனக்கருத்துக்களை மாற்றிக்கொள்ளச் செய்வதிலும் அவன் தேர்ச்சிபெற வேண்டும்; அதாவது புதிய நிலையின் மாறுதல் அளவுக்கு ஏற்றாற்போல், புதிய புரட்சிகரமான கடமைகளையும், புதியவேலைத் திட்டங்களையும் முன்வைக்க வேண்டும். ஒரு புரட்சிகரமான காலகட்டத்தின் நிலைமைகள் வெகுதுரிதமாக மாறுகின்றன: மாறிய நிலைமைக்குத்தகுந்தபடி புரட்சிக்காரர்களின் அறிவும் வேகமாக மாறாவிட்டால், அவர்களால் புரட்சியை வெற்றிக்கு இட்டுச்செல்ல முடியாது.

எனினும், அடிக்கடி கருத்துக்கள் யதார்த்தத்துக்குப் பின்தங்கிச் சுணங்குகின்றன! மனிதனின் அறிவு பல சமுதாய நிலைமைகளால் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதே இதற்குக் காரணம். மாறிக் கொண்டிருக்கும் புறநிலைமைகளுடன் முன்னேறத் தவறி வலதுசாரிச் சந்தர்ப்பவாதமாகச் சரித்திரரீதியில் பிரதிபலிக்கும் கருத்துக்களையுடையவர்களாக புரட்சி அணியிலுள்ள பிடிவாதிகளை நாம் எதிர்க்கின்றோம். முரண்பாடுகளிலிருந்து எழும் போராட்டங்கள் புறநிகழ்ச்சியை முன்னுக்குத் தள்ளிச்சென்று விட்டதென்பதை அவர்கள் பார்க்கத் தவறுகிறார்கள்? அவர்களுடைய அறிவோ பழைய கட்டத்திலேயே நின்றுவிட்டது. சகல பிடிவாதிகளின் கருத்துகளிலும் இந்த விசேஷத் தன்மையைக்காணலாம். அவர்களுடைய கருத்துக்கள் சமுதாய நடைமுறையிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கின்றன; எனவே, அந்தக் கருத்துகளால் சமுதாயத் தேர்ச்சக்கரங்களை நடத்திச் செல்ல முடியாது. தேருக்குப் பின் ஊர்ந்து வரவும், தேர் அதி வேகமாகப் போகிறதென்று புகார் செய்யவும், தேரைப் பின்னுக்கிழுத்து எதிர்த்திசையில் போகும்படி முயற்சி செய்யவும்தான் அவர்களால் முடியும்.

''இடதுசாரிவாதி'' களின் வெற்றுரைகளையும் நாம் எதிர்க்கின்றோம். இவர்களுடைய கருத்துக்கள் புறநிகழ்ச்சியின் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்துக்கு முன்னால் உள்ளது. அவர்களில் சிலர் தமது பிரமைகளை உண்மையாகக் கருதுகின்றனர்; இன்னும் சிலர் எதிர்காலத்தில் மட்டுமே கைகூடக்கூடிய ஒரு இலட்சியத்தை நிகழ்காலத்தில் சாதிப்பதற்காகப் பாடுபடுவதின் மூலம், தம்மை பெரும்பான்மையான மக்கள் ஈடுபட்டுள்ள இன்றைய நடைமுறையிலிருந்தும் இன்றைய உண்மைகளிலிருந்தும் கத்தரித்துக்கொள்கின்றனர்; தமது நடவடிக்கைகளில் துணிச்சல்வாதிகளாக இருக்கின்றனர்.

கருத்துமுதல் வாதமும் யாந்திரீகப் பொருள்முதல் வாதமும், சந்தர்ப்பவாதமும் துணிச்சல்வாதமும், அகத்துக்கும் புறத்துக்குமிடையே பிளவு இருப்பதையும் அறிவு நடைமுறையிலிருந்து துண்டிக்கப்படுவதையும் விசேஷ குணமாகக் கொண்டவை. விஞ்ஞானரீதியான சமுதாய நடைமுறையை விசேஷ குணமாகக் கொண்ட அறிவு சம்பந்தமான மார்க்சிச-லெனினிசத் தத்துவம், மேற்சொன்ன தவறான சித்தாந்தங்களை உறுதியாக எதிர்க்காமலிருக்க முடியாது. எதையும் சார்ந்திராததாகவும் முழுமையானதாகவும் உள்ள பிரபஞ்ச வளர்ச்சி நிகழ்ச்சியில், ஒவ்வொரு ஸ்தூல நிகழ்ச்சியின் வளர்ச்சியும் ஒரு எல்லைக்குட்பட்டது; எனவே, சார்பற்ற பேருண்மையின் பெருநீரோட்டத்தில, ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் ஸ்தூலமான நிகழ்ச்சியைப்பற்றி மனிதன் பெறும் அறிவு சார்புடைய உண்மையாகவே இருக்கிறது என்பதை மாக்சிசவாதிகள் அங்கீகரிக்கின்றார்கள். கணக்கிட முடியாதசார்புடைய உண்மைகளின் ஒட்டுமொத்தமே சார்பற்ற பேருண்மையாகும். 8: புறநிகழ்ச்சியின் வளர்ச்சி முரண்பாடுகளும் போராட்டங்களும் நிறைந்தது; மனிதனின் அறிவு வளர்ச்சியும் முரண்பாடுகளும் போராட்டங்களும் நிறைந்தது. புற உலகத்தின் இயங்கியல் இயக்கங்கள் அனைத்தையும் சீக்கிரமாகவோ, காலம் தாழ்ந்தோ மனித அறிவில் பிரதிபலிக்கச் செய்யமுடியும். சமுதாய நடைமுறையில் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகியவைகளைக்கொண்ட நிகழச்சி முடிவற்றதாய் இருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

**தத்துவஞானிகள் உலகைப் பல் வேறு வழிகளில் அர்த்தப்படுத்தியுள்ளனர். ஆனல் பிரதானமானது அதை மாற்றுவதுதான்**

— மாக்ஸ்

# பஞ்சமர் நாவல் — விமர்சனம் 2

## கலை - இலக்கிய அரங்கம்

## வெறும் குரோத உணர்வுகளுக்கு வர்க்க உணர்வு என்று அர்த்தமா?

டானியலின் பஞ்சமருக்கு ஆராத்தி எடுக்கக் 'கூலிக்கு கல்வெட்டு எழுதும்' அறிஞர் பரம்பரை இருக்கிறது போதாது என்று டானியலே புத்தக முன்னுரையில் சுயபுராணம் பாடி வைத்திருக்கிறார். சாதிஎதிர்ப்புப் போராட்டத்தையிட்டு பலரைக் கைதுசெய்த அரசாங்கமும், டானியலுக்குச் சாகித்தியமண்டலப் பரிசு வழங்கிய அரசாங்கமும் வேறு என்ற உண்மை விடுபட்டுப் போய்விட்டது. வழங்கப்பட்ட சாகித்திய மண்டலப் பரிசுகள் (பஞ்சமர் 1ம்பாகம், போராளிகள் காத்திருக்கின்றனர்) அரசியல் லஞ்சங்கள் என்று டானியல் நினைக்கிறது உண்மையானல் அவற்றை மறுத்து அன்றே அந்த உண்மையை அம்பலப்படுத்தி இருக்கலாமே! சாகித்தியமண்டலத்தில் நடந்த விஷயங்கள் யாவும் வெளியில் வந்தால் டானியலின் புரட்டு என்னவது? ஆகவே முன்னுரை 'கூழுக்கும் ஆசை ......' என்கின்ற மாதிரி அமைந்துவிட்டது.

அதிதீவிர இடதுசாரி அரசியல் எழுதிப் பணம்பண்ணுவதில் இந்திரா பார்த்தசாரதியும், ஜெயகாந்தனும் கூட இறங்கிவிட்டார்கள். கணேசலிங்கனுடைய கனவுலகப் புரட்சிக் காவியங்களைவிட இ. பா., ஜெயகாந்தன் போன்றோரது சரக்குகளுக்கு மவுசுகூட. டானியலின் முயற்சியைப் பார்க்கும்போது அவர் பிழையான கோதாவில் இறங்கிவிட்டார்போல் படுகிறது. சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, இந்துமதி போன்ற 'சதை' விஷயங்களை எழுதுவதற்குத்தான் அவர் கூட லாயக்கு. அதற்கும்சரி அவர் எழுதும் இதற்கும்சரி வேண்டிய பெருகு டானியலின் எழுத்தில் இல்லை. (அதெல்லாம் எழுதிப் பழகப் பழக நாட்போக்கில் சரியாகிவிடலாம். இன்னமும் காலம் இருக்கிறது. டானியல் அவர்களே, கவலையை விடுங்கள்) டானியலுடைய கதையில் வரும் அதி புத்திசாலி ஜீவன் வீமன் நாய்தான். அதற்குத்தான் மனித உடம்பில் எந்தப்பாகத்தில் கடித்தால் டானியலின் கதையின் விரசப்போக்கிற்குப் பொருந்தும் என்று தெரியும்.

புரட்சி, புரட்சி என்று பேசுகின்றார்களே. அது என்னவென்று புரிந்து வைத்திருக்கிறார் என்று டானியலைக் கேளுங்கள் சொல்லுவார். ஊர்வப்பு, இரட்டை அர்த்தம் தொனிக்கும் கீழ்த்தரமான நகைச்சுவை, சிண்டு முடிதல் இவையெல்லாம் ஒரு புரட்சிவாதிக்கு அவசியமான இலக்கணங்கள். புரட்சியின் வெற்றிக்கு அத்தியாவ

(7-ம் பக்கம் பார்க்க)

---

# லூசுன் படைப்புகளில் இருந்து - 3

நான் அழகிய மதிற்சுவரோரமாகப் புழுதியூடாகத் தள்ளாடியாடி செல்கின்றேன். வேறுபலரும் தனிமையில் நடந்துகொண்டிருக்கின்றார்கள். மென்காற்று எனது தலைக்கு மேலாகவும், மதிலுக்கு மேலாகவும், உயர்ந்த மரத்து உதிராத கிளைகளுக்கு மேலாகவும் வீசுகின்றது.

காற்று வீசவே புழுதி எங்கும் பரவுகின்றது.

சிறுவனொருவன் என்னிடம் யாசிக்கின்றான். மற்றவர்களைப் போலவேதான் அவனும் சட்டை அணிந்துள்ளான். முகத்தில் கவலையின் ரேகையையே காணவில்லை. எனது பாதையின் குறுக்கே நிற்கின்றான். நெற்றி நிலத்தில் தோயும்படி வணங்கி, சிணுங்கியபடியே என்னைப் பின் தொடர்கின்றான்.

அவனுடைய தொனியையும் போக்கையும் நான் விரும்பவில்லை. கவலையின் அறிகுறி எதுவுமின்றி அவன் ஆடுகின்ற 'கூத்து' எனக்கு வெறுப்பை ஊட்டுகின்றது. சிணுங்கியபடியே என்னைப் பின்பற்றி வருகின்ற போக்கு எனது வெறுப்பைக் கூட்டுகின்றது.

நான் தொடர்ந்து நடக்கின்றேன்; வேறு பலரும் தனிமையில் நடந்துகொண்டிருக்கின்றார்கள். மென்காற்று வீசவே எங்குமே புழுதிமயமாகிறது.

## இரவலர்கள்

சிறுவனொருவன் என்னிடம் யாசிக்கிறான். மற்றவர்களைப்போலவே தான் அவனும் சட்டை அணிந்துள்ளான். ஆனல் இவனோர் ஊமை; மௌனமாகவே என்னை நோக்கித் தன் கைகளை நீட்டுகின்றான்.

அவனுடைய இந்த ஊமையாட்டத்தை நான் வெறுக்கின்றேன். அவன் உண்மையில் ஊமையாயல்லாமல இரக்கப்பயன்படுத்தும் முறை இதுவாயிருக்கலாம்,

நான் பிச்சையிடவும் இல்லை. எனக்குப் பிச்சையிடும் விருப்பமுமில்லை, நான் இரவலரைப் புரப்பவிருக்கும் மேலானவன். அவன் மீது எனக்கு இருப்பதெல்லாம் வெறுப்பும்,சந்தேகமும் சலிப்புமே.

சரிந்த மதிற்சுவரோரமாகச் செல்கிறேன். சிதைந்த செங்கற்கள் இடைவெளிகளில் அடுக்கப்பட்டுள்ளன. மதிற்சுவருக்கப்பால் ஒன்றுமே காணப்படவில்லை. குளிர் காற்று என் சட்டையின் ஊடாகவும் வீசுகின்றது. எங்குமே புழுதிமயம்தான்.

பிச்சை எடுக்க நான் எம்முறையைப் பின்பற்ற வேண்டியிருக்கும் என ஆலோசிக்கின்றேன், எந்தக் குரலில் பேசுவது? ஊமையாய்ப் பாசாங்கு செய்வதாயின் எந்த ஊமையாட்டத்தைக் காட்டுவது?......

பலரும் தனிமையில் நடந்து கொண்டிருக்கின்றார்கள். நான் எவரிடமும் யாசிக்கவும் மாட்டேன் எவருக்குப் பிச்சையிடும விருப்பமும் எனக்கில்லை. இரவலரைப் புரப்போருக்கும் பேலானவர் எனக் கருதுவோருக்கு என்மீது வெறுப்பும், பகைமையும் சந்தேகமும் ஏற்படும்.

நான் சோர்வுடனும் அமைதியுடனும்யாசிப்பேன். இறுதியில் எனக்குக் கிடைக்கப்போவதோ ஒன்றுமேயில்லை.

மென்காற்று வீச புழுதி எழுகிறது. வேறு பலரும் தனிமையில் நடந்துகொண்டிருக்கின்றார்கள்.

புழுதி ......... புழுதி
..................
புழுதி ..........

தமிழில்: க. நடனசபாபதி.

---

## கொம்பியூட்டருக்கு ஒரு கணக்கு

கடதாசித் துண்டொன்றில்
கூட்டிக் கழித்துக் கணக்கெழுதும் நேரத்தில்
வந்தான் என் நண்பன் (ஊர்க்காரன் முன்பு,
இப்போது அமெரிக்கன்)
செய்வது என்னவெனக் கேட்டான், கணக்கென்றேன்,
உரக்கச் சிரித்தான்.

''கொம்பியூட்டர்மூலம் காரியங்கள் செய்கின்ற
இந்த யுகத்திலா நீயும் இருக்கின்றாய்?
கையாற் கணக்கெழுதல் கற்காலம் காண்'' என்று
நீட்டி முழக்கியவன் நேரஞ்சில மேலும்
பேசியபின் போனன். போனதன்பின் யோசித்தேன்.

கொம்பியூட்டர் வழிகாட்ட விண்கலங்கள் சஞ்சரிக்கும்
விண்வெளியின் கீழேதான் மானிடத்தின் பாதியினர்
சுட்டெரிக்கும் வெய்யிலிலே செருப்பின்றி நடக்கின்றார்

கொம்பியூட்டர் மொழிபெயர்த்து அச்சடித்துத் தருகின்ற
இந்த யுகத்தில்தான் பேரெழுதத் தெரியாமல்
மானுடத்தின் பாதியினர் கைநாட்டுப் போடுகிறார்

கொழுப்புக் கரைவதற்கும் கொம்பியூட்டர் துணைபோகும்
கோளமிதன் மேலேதான் மானுடத்தின் பாதியினர்
நிறையாத வயிற்றுடனே நித்திரைக்குப் போகின்றார்

காலிற் செருப்பற்ற, கைநாட்டுப் போடுகிற
அரைவயிற்றுக் கூட்டத்தார்
அனல்கக்கிக் குண்டெறிய வழிகாட்டும் கொம்பியூட்டர்
கொண்டுதலை ஆள்பவரை
மோத முனைவதெலாம் மடமையெனில்
வெல்லுகிறார், எவ்வாறு?
விளக்கிடுமா கொம்பியூட்டர்?

— சேகர்

---

5-ம் பக்கத் தொடர்......

எனவே மனித அறிவிலும் தோற்றம், வளர்ச்சி, மறைவு ஆகியவைகளைக் கொண்ட நிகழ்ச்சி முடிவற்றதாயிருக்கின்றது. குறிப்பிட்ட கருத்துக்கள், தத்துவங்கள், திட்டங்கள் அல்லது நிகழ்ச்சிநிரல்கள் அடிப்படையில் புறயதார்த்தத்தை மாற்றுவதற்கான நடைமுறை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மென்மேலும் முன்னேறும்பொழுது, புறயதார்த்தம் சம்பந்தமாக மனிதனின் அறிவும் ஒவ்வொரு தடவையும் ஆழ்ந்ததாகின்றது. புறயதார்த்த உலகத்தின் மாறுதல் நிகழ்ச்சி ஒருபோதும் முற்றுப்பெருது; நடைமுறை மூலம் மனிதன் உண்மையை அறிவதும் ஒருபொழுதும் முற்றுப்பெருது, எந்தவகையிலும் மார்க்சிச — லெனினிசத்தில் உண்மை வற்றிப்போய் விடவில்லை; மாறாக அது நடைமுறைவாயிலாக, உண்மையை அறியும் பாதையை இடைவிடாமல் திறந்துவிடுகிறது. அகமும் புறமும் தத்துவமும் நடைமுறையும், அறிவதும் செய்வதும் ஸ்தூலமாக சரித்திரரீதியாக ஒன்றுபடவேண்டுமென்பதும், ஸ்தூலமான சரித்திரத்திலிருந்து பிரிந்துசெல்லும் 'இடதுசாரி' அல்லது வலதுசாரி தவறான சித்தாந்தங்களை எதிர்க்க வேண்டும் என்பதும் நமது முடிவு.

இன்றைய கட்டத்திற்கு சமுதாயம் வளர்ந்திருக்கும் நிலையில் உலகத்தைப் பிழையற்ற முறையில் புரிந்துகொண்டு மாற்றும் பொறுப்பு சரித்திரத்தால் பாட்டாளிவர்க்கத்திடமும் அதன் கட்சியிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. விஞ்ஞானரீதியான அறிவுக்கு உகந்தமுறையில் தீர்மானிக்கப்பட்ட உலகத்தை மாற்றும் இந்த நடைமுறையின் நிகழ்ச்சி உலகத்திலும் சீனுவிலும் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நேரத்தை — மனித வரலாற்றில் முன்னெப்போதும் கண்டிராத மகத்தான தருணத்தை அடைந்துவிட்டது; அதாவது உலகத்திலும் சீனுவிலும் உள்ள இருளைப் பூர்த்தியாக அகற்றி, இதற்கு முன் ஒருபொழுதும் இருந்திராதஒளி வீசும் உலகத்தை ஸ்தாபிக்கும் நேரத்தை அடைந்துவிட்டது. உலகத்தை மாற்றுவதற்காக பாட்டாளி வர்க்கமும் புரட்சிகர மக்களும் நடத்தவேண்டிய போராட்டம் கீழ்க்கண்ட கடமைகளை சாதிப்பதில் அடங்கியிருக்கின்றது; புற உலகத்தையும் தமது சொந்த அக உலகத்தையும் அவர்கள் புதுவார்ப்பிலெடுக்க வேண்டும்; அதாவது அறிந்துகொள்ளும் திறனையும் அக உலக-புற உலக உறவுகளையும் புதுவார்ப்பில் எடுக்கவேண்டும்; அதாவது பூகோளத்தின் ஒருபகுதியில் —சோவியத்யூனியனில் இத்தகைய புதுவார்ப்பிலெடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றுவிட்டது. அங்கு மக்கள் இன்றும் இந்த நிகழ்ச்சியை துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சீனமக்களும் உலகத்தின் இதர பகுதிகளில் வழும் மக்களும் இந்த முறையில் புதுவார்ப்பில் எடுக்கப்படுகிறார்கள் அல்லது எடுக்கப்படுவார்கள். புதுவார்ப்பிலெடுக்க வேண்டிய உலகம் என்பதினுள் இந்த மாறுதலுக்கு விரோதிகளாய் இருப்பவரும் அடங்குவர். ஒரு காலகட்டத்துக்கு அவர்களைக் கட்டாயப்படுத்திப் புதுவார்ப்பில் எடுக்க வேண்டும்; பிறகு அவர்கள் உணர்வுபூர்வமாக இந்த மாறுதலுக்கு இசைவார்கள்; மனிதகுலம் முழுமையும் உணர்வு பூர்வமாகத் தன்னைப் புதுவார்ப்பிலெடுத்துக்கொண்டு: உலகத்தை மாற்றும்பொழுது உலகக் கம்யூனிச சகாப்தம் உதயமாகும்.

நடைமுறைமூலம் உண்மையைக்கண்டு பிடிப்பது; நடைமுறைமூலம் உண்மையைச் சோதித்து வளர்ப்பது. புலனறிவில் தொடங்கிச் செயல்படும்முறையில் அதை பகுத்தறிவாக வளர்ப்பது; பிறகு பகுத்தறிவில் தொடங்கி அக, புற உலகத்தை புதுவார்ப்பிலெடுப்பதற்காக செயல்படும் முறையில் புரட்சிகரமான நடைமுறைக்குத் தலைமைதாங்குவது. நடைமுறை, அறிவ, மீண்டும் நடைமுறை, மீண்டும் அறிவு; இந்த நிகழ்ச்சி எல்லையற்ற முறையில் திரும்பத் திரும்ப நடைபெறுகின்றது. ஒவ்வொருமுறையும் நடைமுறை அறிவு ஆகியவற்றின் உள்ளடக்கம் உயர்ந்த தரத்துக்கு மேம்படுவது — அறிவு சம்பந்தமான இயங்கியல் — பொருள்முதல்வாதத் தத்துவத்தின் முழுமை இத்தகையது; அறிவதற்கும் செய்வதற்கும் இடையேயுள்ள ஒற்றுமைபற்றிய இயங்கியல் — பொருள்முதல்வாத தத்துவம் இத்தகையது.

### குறிப்புகள்

4. 'புரிந்துகொள்ளவேண்டுமானல் அனுபவரீதியாக புரிந்துகொள்ள ஆரம்பித்து, படித்து, அனுபவவாதத்திலிருந்து பொதுமை தழுவியதாக உயர்த்துவது அவசியம்'. (லெனின், 'ஹெகலின் 'தர்க்கவியல்' என்ற நூல்பற்றிய ஒரு பொது ஆய்வு')
5. வி.ஐ.லெனின், 'செய்யவேண்டிய தென்ன?' முதலாம் அத்தியாயம் 4ம் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.
6. வி.ஐ. லெனின், 'பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்' அத்தியாயம் 2, பகுதி 6 ஐப் பார்க்கவும்.
7. ஜே. வி. ஸ்டாலின், 'லெனினிசத்தின் அடிப்படைகள்பற்றி' பாகம் 3 ஐப் பார்க்கவும்.
8. வி.ஐ.லெனின், பொருள்முதல் வாதமும் அனுபவவாத விமர்சனமும்' அத்தியாயம் 2, பகுதி 5 ஐப் பார்க்கவும்.

# பிரஜாவுரிமைப்பிரச்சினைக்கு வாய்மொழி உறுதிகள் தீர்வாகுமா?

தார்மீக ஆட்சியிலும் பிரஜை அந்தஸ்தில் வம்சாவழிப் பிரஜை, பதிவுப் பிரஜை, நாடற்றவர்கள் என்ற பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றது என்பது உலகறிந்த உண்மை.

பிரஜாவுரிமைப் பிரச்சினை என்பது மலையக மக்களுக்கேயான தனித்துவமுடையதாகவும், ஜீவாதாரமானதாகவும் இருக்கின்றது.

இந்த உரிமைகளை நிலை நாட்டுகின்ற போராட்டமே மலையகமக்களின் வாழ்க்கை முறையாகிவிட்டது.

பல்கலைக்கழகத்தில் நாடு அற்றவர்கள் உயர்படிப்பை மேற்கொள்ள கட்டணம் செலுத்தவேண்டும் என்றிருந்த விதி மலையக சமூகத்தை பெரிதும் பாதித்த ஒன்று. இதற்கான போராட்டம் வெற்றிகண்டமையும் குறிப்பிடத்தக்கது. இதுபோன்று பிரசாவுரிமை தொடர்பான பல உபகோரிக்கைகள் மக்களின் அயராத போராட்டத்தால் வெற்றிகொள்ளப்பட்டுள்ளமை மலையக மக்களின் வெற்றிப்பாதையின் தழும்புகளாகும்.

எனினும் இப்பிரச்சினை முழுமையாக தீர்வு கண்டுவிடவில்லை என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. மாறாக வெறும் ஏமாற்று கோஷங்களாக தீர்வு மழுங்கடிக்கப் பட்டு வந்துள்ளது.

அண்மைக்கால பத்திரிகைச் செய்திகளில் வம்சாவழிப்பிரஜை, பதிவுபிரசை என்ற வேறுபாடு காட்டப் படமாட்டாது என்றும் அவை பிரஜை தொடர்பான தேவைகளில் வெவ்வேறுவகையாக கணிக்கப்பட மாட்டாது என்ற கருத்துப்படவும் வெளிவருகின்றது. மேலும் அடுத்த வருடம் 'நாடற்றவர்' என்ற நிலை இருக்காது என்ற 'உறுதியும்' மேடைகளில் முழங்குகின்றது. இவை ஆட்சியாளர்களினதும் கௌரவ சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களினதும் / 'வாய்மொழிகளாக' உள்ளமை. இது தொடர்பில் ஐயப்பாடுகளை கிளப்பி உள்ளது.

'சட்டப்படி நடக்கின்றோம்; சட்டப்படி நடாத்துகின்றோம்' எனும் சனநாயக போர்வையில் சர்வாதிகாரத்தை நிலைநாட்டி வருகின்ற யூ.என்.பி. ஆட்சியின் மிக இறுக்கமான சட்டப்பிடியிலுள்ள பிரசாவுரிமைப் பிரச்சினைக்கு மேடைகளிலும் பத்திரிகைகளிலும் உறுதிகூறப்படுவது எந்தளவுக்கு உண்மையானது நியாயமானது என்பது கவனிக்கப் படவேண்டும்.

எந்த உரிமையைக் கேட்டாலும் அது 'சட்டத்தில் இல்லை' என்பதும் உரிமை மறுக்கப்படுகின்றமையை எதிர்த்தால் 'அதை சட்டப்படி செயற்படுத்துகின்றோம்' என்பதும் ஆட்சியாளர்களின் பாசிச ஆட்சியை நிலைநிறுத்தக் கூறும் நியாயமாகும். எனினும் சட்டபூர்வமாகக் கொடுக்கப்பட்ட உரிமைகளும் சலுகைகளும் கூட மறுக்கப்பட்டுள்ளமை ஒருபுறம் இருக்க—வாய்மொழியிலான பிரசாவுரிமைப் பிரச்சினைக்கான தீர்வு உறுதியானதா?

சனாதிபதி தேர்தல், அதனைத் தொடர்ந்த பொதுத் தேர்தல் என்பவற்றில்வெற்றி காண சிறுபான்மை மக்களின் ஆதரவு இன்றியமையாதது. எனவே மலையக மக்

—ஜனப்பிரியன்—

களின் ஆதரவைத் திரட்ட திரு. தொண்டமானும், யூ.என்.பி.யும் சேர்ந்து தயாரித்த ஒரு தேர்தல் ஸ்ரண்டாகவே இது அமையும்.

ஏனெனில் எமது நாட்டின் மிகவுயர்ந்த சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு உறுப்புரை வம்சாவழி, பதிவுவழி பிரசைகளுக்கிடையே எந்த வேறுபாடும் காட்டப்படமாட்டாது என்று கூறுகின்றது. வம்சாவழி, பதிவுவழி என்ற வேறுபாடு இருக்காது என்று கூறாது மாறாக அவைகளுக்கிடையே வேறுபாடு காட்டப்படமாட்டாது என்றே கூறுகின்றது. அத்துடன் நாடற்றவர்களுக்கு அடிப்படை உரிமைகளை அனுபவிக்க 10 வருடச்சலுகை கொடுக்கப்பட்டுள்ளமை நாடு அற்றவர்கள் தொடர்ந்து இருப்பார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகின்றது.

தலையாய சட்டத்தில் இவ் வேறுபாடு இருக்கின்றபோது பத்திரிகைச் செய்தியும் மேடைப்பேச்சும் உறுதியாக அல்லது பாதுகாப்பாக அன்றி ஒரு தேர்தல் ஸ்ரண்டாகவே அமையும் என்பதில் சந்தேகமுண்டா?

சரி அதுதான் போகட்டும் அரசியலமைப்புக் கூறுகின்ற விதத்திலாவது நடைமுறைத்தன்மை உண்டா? ஆகக் குறைந்த தொழில் உரிமைக்குகூட பிரசையா? இல்லையா? பதிவா? வம்சாவழியா? என்ற கேள்விகட்கு விடையளிக்க வேண்டிய கடமையில் இருந்து எந்தப் பிரசையாவது விடுபட்டுள்ளாரு? பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றவர்கள் பதிவு செய்யும்போது — ஏன் பாடசாலைகளில் பதிவுசெய்யும் போது கூட இத்தகையகேள்விகட்கு பதிலளிக்க வேண்டியது தவிர்க்க முடியாதுள்ளது.

மேலும் பிரசாவுரிமை வழங்குவதில் பதிவுவழி, வம்சாவழி என்ற இருவேறுபட்ட அந்தஸ்துக்கள் உள்ளமையும் கவனிக்கத் தக்கது. இதைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க இரண்டு வேறு வகையான தகைமைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அவை —அந்த உரிமை மறுக்கப் பட்ட வேறுபட்ட இரண்டு வகை தகைமையீனங்கள் சமமற்று காணப்படுவதும் உண்மையே. இதற்கு மேலாக இவை இரண்டுக்கும் வம்சாவழி பதிவுவழி எனும் இரு வகை முத்திரையிடப்பட்டுள்ளதும் சட்டத்தில் இருக்கின்றது. இவ்வாறு இந்த பிரசை அந்தஸ்தை உருவாக்கும் மூலத்திலேயே வேறுபட்ட, வித்தியாசமான சட்ட இறுக்கங்களைக் கொண்டுள்ளதுடன் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம், பாகிஸ்தான் ஒப்பந்தம் ஸ்ரீமா இந்திரா ஒப்பந்தம் என்ற வேறுவகைப்பட்ட சிக்கல்களின் மூலம் பிரசாவுரிமைக்கான வழிவகைகள் இறுக்கமடைந்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறுள்ள அந்தஸ்துகளை வழங்குகின்ற அடிப்படையில் எந்தவித மாற்றமும் கொண்டுவராது—பதிவு வழி என்ற வேறுபாடில்லை என்றும் நாடற்றவர் என்போர் இனி இல்லை என்றும் வெறும் கோஷங்களாகஅமைகின்ற பத்திரிகை செய்திகளும் மேடைப் பேச்சுகளும் வலிமை கொண்டவையோ அல்லது நடைமுறை சாத்தியமானவையோ அல்ல.

தன்னை வெற்றி பெறச் செய்ய அல்லதுதான் பிரஸ்தாபிக்கும் யூ. என்.பி.யை வெற்றிபெறச் செய்ய மலையக மக்களின் உரிமைகளின் புதைகுழியிலே உயிர்த்து வாழ்கின்ற திருவாளர் தொண்டமானின் தேர்தல் ஸ்ரண்டேயாகும்.

இவை உண்மையாக, வேண்டுமெனின் பிரசாவுரிமை தொடர்பான சட்டங்களில் மாற்றம் கொண்டுவர வேண்டியது அல்லது திருத்தம் கொண்டுவர வேண்டியதும் அவசியமாகும். சுருக்கமாகக் கூறின் வம்சாவழி பதிவுவழி என்ற வாசகங்களும் அதற்கான வேறுபட்ட அந்தஸ்துகளாக மதிக்கப்படும் தேவைகளும் வழிவகைகளும் அழித்து ஒழிக்கப்பட வேண்டியதாகும். அதுமட்டுமன்றி அதற்கு மேலாக அவை நடைமுறைக்கும் கொண்டு வரப்பட வேண்டியதும் அவசியம். நாடற்றவர் பிரச்சினை தீர்க்க வழிவகை உறுதி செய்யப்பட வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே இதுதொடர்பில் தீர்வுகாணவேண்டிய தவிர்க்க முடியாத காலகட்டத்தை அரசாங்கம் அடைந்துள்ளமையையும் தீர்வு நோக்கிய போராட்டம் முன்னேற்றம் அடையவேண்டிய அதிமுக்கிய தருணத்தை மக்கள் அடைந்துள்ளமையையும் மலையகமக்களும் ஸ்தாபனங்களும் காணுமல் இருந்துவிட முடியாது.

★

## பஞ்சமர்

(6-ம் பக்கத் தொடர்)

சியமான ஒரு காரணி மேற்சாதியினர் நடுவிலுள்ள குடுமிப்பிடிச் சண்டைகள். வர்க்கம், வர்க்கப் போராட்டம் என்றெல்லாம் யாராவது கேட்டால் அதெல்லாம் டானியலின் அகராதியில் புதிய அர்த்தத்தில்தான் விளக்கப்படும்.

சாதி அடிப்படையிலான ஒடுக்கலை எதிர்ப்பதும் அதை ஏகாதிபத்திய விரோத விடுதலைப் போராட்டத்துடனும் வர்க்கப்போராட்டத்துடனும் பிணைப்பதும் டானியலுக்கு முக்கியமான விஷயங்கள் இல்லை. அவரது கண்ணோட்டம் நியாயமான ஒரு போராட்டத்தை, அடக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சியை வெறும் சாதி அடிப்படையிலான காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாக காட்டுவதற்கு அப்பால் போக முடியாமல் திணறுகின்றது. அடக்குமுறையை எதிர்ப்பதில் கம்யூனிஸ்ட் கட்சியொன்றின் வழிகாட்டலின் பங்கையும் அவசியத்தையும் மறைக்கமுனையும் டானியல் சரித்திர அடிப்படையில் நடந்த சம்பவங்களின் அடிப்படையில் எழுதிய கதை என்று கூறும் 'காலத்தக்கட்டில்' உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியின் உயரிய பங்கு அப்படியே விடுபட்டுப்போய்விட்டது. (அல்லது சாகித்திய மண்டல பரிசுதான் கிடைத்திருக்குமா?)

டானியலின் நாவலின் பாத்திரங்கள் வானத்தில் இருந்து பொத்துப்பொத்தென்று விழுகின்றன. முக்கியமான எந்த ஒரு பாத்திரமும் கதைப்போக்கினுடன் சேர்ந்து வளர்ந்து உருவாகுவதாகத் தெரியவில்லை. பல சம்பவங்கள் சம்பந்தா சம்பந்தமற்று வேண்டும் என்றே ஒட்டப்பட்ட பாங்கில் அமைந்துள்ளன. (ஆபாச சினிமாப் படங்களில் 'துச்சாதனக்' காட்சிகள் மாதிரி) பல இடங்களில் வாசகரை திமிர்ந்து இருக்கச் செய்பவை பக்கத்துக்கு பக்கம் தவருமல் வரும் அச்சுப்பிழைகள்தான். ஒப்செற் அச்சுமுறைபற்றி நல்ல அபிப்பிராயம் வைத்திருந்தேன். பஞ்சமர் படிக்கும்வரை, இந்த மட்டரக நாவலின் மட்டரக அச்சுக்கு இந்திய ரூபா 31-00!? (இலங்கை ரூபா 60-00) இதைவிட மிகமலிவாக நம்மூரிலேயே செய்திருக்கலாம். பட்டுத்தரித்தது போதாது மேலுமா இந்த வம்பு என்று நம் நாட்டு அச்சகத்தார்கள் சொல்லி விடுவார்களோஎன்ற பயம்போலும். ஆசிரியருக்கு விட்டுவிட்டார்.

டானியலின் அடுத்த நாவலுக்குரிய தலைப்புக்கான ஒருயோசனை; 'ஏமாளிகள் காத்திருக்கிறுர்கள்'.

— ஜெ

# பாலஸ்தீன விடுதலையை எவராலும் நசுக்க முடியாது!

பாலஸ்தீன விடுதலை இயக்க வீரர்கள் லெபனுன் தலைநகரிலிருந்து வெளியேறி விட்டனர். இறுதியாக தலைவர் அரபாத் புறப்பட்டுச் சென்றுர். இஸ்ரவேலைப் பொறுத்தவரையில் தான் நினைத்த காரியத்தை சாதித்து முடித்துவிட்டது. பாசிச ஆட்சியில்ஹிட்லர் கிழக்குஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வேறு சில தேசங்களிலிருந்தும் துப்பாக்கி முனையில் மக்களை அப்புறப்படுத்தியதற்கு எல்லா வகையிலும் ஒப்பாக இஸ்ரவேலின் இந்த அசுரத்தனத்தை விவரிக்கலாம். யூதர்கள் பல நூற்றுண்டுகளாகத் துன்புறுத்தப்பட்ட சாகியத்தார் என்று இஸ்ரேலிய பிரசாரம் அடிக்கடி கூறுவதுண்டு. அது உண்மையாக இருந்தாலும் லெபனுனில் இஸ்ரவேல் நடந்துகொண்ட விதம் வரலாறு முன்னர் கண்டிராத காட்டுமிராண்டித்தனமாகும். தற்காலிகமாக பிரதமர் பெகினும், படைத்தளபதி ஷரோனும் வெற்றிபெற்று விட்டதாக மனப்பால் குடிக்கக்கூடும். ஆனால் இதற்கு பதில்கூற வேண்டிய காலம் வந்தே தீரும்.

பாலஸ்தீன விடுதலை இயக்க வீரர்களை மட்டுமல்லாது பாலஸ்தீனிய அகதிகளையும் மேற்கு பெய்ரூத்திலிருந்து இராணுவ பலத்தினுல் இஸ்ரவேல் அப்புறப் படுத்திக் கொன்று குவிக்கலாம். ஆயினும் லெபனுனி

— உதயன் —

லுள்ள ஐந்து இலட்சம் பாலஸ்தீனர்களை லெபனுன் தேசத்திலிருந்து வெளியேற்ற முடியாது; அவர்கள் எங்கு போவார்கள்? தமது பொன்னுட்டிலிருந்து இஸ்ரவேலின் பலத்தினுல் அகதிகளாக்கப் பட்ட அவர்கள் தங்குமிடம் தேடி லெபனுன் நாட்டிற்கு வந்து தஞ்சம் புகுந்தனர்: அங்கும் இருக்கக் கூடாது என்று கலைத்தால் அவர்கள் எங்குதான் போகமுடியும்? உலகில் வாழும் ஒவ்வொரு பாலஸ்தீன மகனையும் மகளையும் ஒழித்துக்கட்டியபின் தான் இஸ்ரவேல் ஓயுமா? இப்பொழுதும் தெற்கு லெபனுனில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீன கொரில்லாக்கள் பொதுமக்கள் ஆதரவுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றுர்கள். வடக்கு லெபனுனில் ஆயிரக்கணக்கான கொரில்லாக்கள் வாழத்தான் செய்கின்றுர்கள். சிரியபடைகளின் கண்காணிப்பிலே இருக்கும் பெக்கா பள்ளத்தாக்கில்சுமார் பத்தாயிரம் கொரில்லாக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றுர்கள். இவர்களையெல்லாம் அப்புறப்புறப்படுத்த இயலுமா? முடியுமா?

உலகத்தின் அபிப்பிராயத்தையும் உணர்வையும் துச்சமெனக் கருதி சின்னஞ்சிறு இஸ்ரவேல் நடந்து கொள்வதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பரிபூரண ஆதரவே அடிப்படைக் காரணம். மத்திய கிழக்கிலும்—மேற்கு ஆசியாவிலும்—அமெரிக்கா தனக்கு நிரந்தரமானதும், முற்றிலும் நம்பகரமானதுமான பெரும் தளமாக இஸ்ரவேலைக் கருதுகிறது. சவூதி அராபியா, ஜோர்தான் முதலிய அமெரிக்கசார்பான அரபு முடியாட்சி நாடுகள் இருந்தாலும் தொலைநோக்கில் அவற்றை மண்குதிரைகளாகவே அமெரிக்கா கருதுகிறது. அசைக்க முடியாத கோட்டையாக இருந்த பாரசீகம் இன்று எங்கே? அமெரிக்கர்கள் பாரசீகத்தை இழக்கக்கூடும் என்று கனவிலும் கருதியிருக்கவில்லை. ஆயினும் அது நடந்தது. அதுபோலவே அரபு முடியாட்சி நாடுகள் காலக்கிரமத்தில் தேசிய எழுச்சிக்கு ஆட்படக்கூடும் என்று கருதுறதாலேயே நிரந்தரமான கோட்டையாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரவேலைப் பலப்படுத்துறது.

இதனை நன்குணர்ந்துள்ள அராபிய அரசியல் அவதானிகள் இஸ்ரவேல் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை என்று அச்சம் தெரிவித்துள்ளனர். பாலஸ்தீன விடுதலை இயக்கப்படைகளைத் தாக்குவதும் மேற்குக்கரையை கைப்பற்ற விரும்புவதும், காசா நிலப்பரப்பைத் தனது பிடிக்

(8-ம் பக்கம் பார்க்க)

### யூ. என். பி.யை எதிர்க்க முடியாத

# முதுகெலும்பற்ற தலைவர்களால் தமிழ்மக்களுக்கு விமோசனம் இல்லை!

யூ. என். பி. எஜமானர்களுக்கு அடங்கி ஒடுங்கி அதற்கு ஏற்றாற்போல் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் தமிழர்கூட்டணித் தலைவர்களை யாரும் மிஞ்சிவிட முடியாது. அதேபோல் இலங்கையில் பிரச்சினைகள் உச்சக்கட்டத்தை அடையும் வேளைகளில் குடும்பம் குடும்பமாக வெளிநாடுகளுக்கு கப்பலேறி விடும் வழக்கத்திலும் அவர்களை யாரும் தாண்டிவிட முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது பச்சோந்தித் தனத்திற்கு 'இனத்தின்' பேரால் 'தமிழ் ஈழத்தின் பேரால் மழுப்பல் நியாயங்கள் கூறி தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத் தூவுதற்கும் அவர்களைவிட பயிற்சி பெற்றவர்கள் வேறுயாரும் இல்லை.

தமிழர்கூட்டணிக்கு அடிகொடுத்து அணைக்கவேண்டும் என்ற கோட்பாட்டை யூ.என்.பி.யும் — ஜே. ஆர்.ரும் பின்பற்றியது யாவரும் அறிவர். விட்டுப் பிடிக்கும் ஜே. ஆர். மாவட்ட சபைத் தேர்தல்காலம்வரை கொடுக்க வேண்டிய சகலதையும் கொடுத்து அதன்மூலம் கூட்டணித் தலைவர்களை சாஷ்டாங்கமாக தன்காலில் விழச்செய்த சம்பவங்களை தமிழ மக்கள் நனகறிவர். தங்களை ஒரு பொருட்டாக ஜே.ஆர். கவனிக்கவில்லையே என்ற மன உளைச்சலில்தான் இடைக்காலத்தில் கூட்டணித் தலைவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேடைகளில் தோன்றி யூ.என்.பி. எதிர்ப்புக்குரல் வைப்பதுபோல் நாடகம் ஆடினர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதற்கும், வேலைநிறுத்தம் செய்து வேலை இழந்தவர்களுக்கும் கண்ணீர் வடிப்பதுபோல் பாசாங்கு செய்தனர். யூ. என். பி.யின் மக்கள் விரோத, ஜனநாயகவிரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பதாகப் பொய்ப் பிரகடனங்கள் செய்தனர். இதைக்கண்ட பலர் தமிழ்த் தலைவர்களின் கடந்தகாலக் கறைபடிந்த யூ. என். பி. ஆதரவு நிலைப்பாடு மாறிவிட்டது என்றும் இந்நாட்டு முற்போக்கு சக்திகளோடு இணைந்துயூ.என்.பி. எதிர்ப்பு அணியில் தமிழ்த்தலைவர்கள் புறப்பட்டுவிட்டார்கள் என்றும் சனப்பொழுது சந்தோஷம் கொண்டனர். அதேபோல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டணியின் சுயரூபத்தைப் புரிந்துகொள்ளாது மாவட்டசபைத் தேர்தலில கிழக்கு மாகாணத்தில் கூட்டணிக்கு வாக்களிக்கும்படி தமது ஆதரவாளர்களைக் கேட்டுக்கொண்டது. இதற்கு ஜே.ஆர்.ரும், யூ.என்.பி.யும் நடத்திய இனவாத பேச்சுக்களை கூட்டணி மறந்தாலும் தமிழ்மக்கள் மறக்க மாட்டார்கள்.

அடிகொடுத்தது போதும் இனி மெல்லமெல்ல ஆளை அணைக்க வேண்டும் என்ற முடிவில் யூ. என். பி. அரசு — கூட்டணிப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. அமிர்தலிங்கமும் அவர்தம் அடியார் கூட்டமும் முழந்தாள் பணிந்து பேச்சுவார்த்தையில் அமர்ந்தனர். மாவட்டசபை, ஊர்காவற்படை நாற்பதுவீதம் பொலிஸ் வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் போன்ற எலும்புத் துண்டுகளை கவ்விக்கொண்டவர்களுக்கு யூ.என்.பி. இழைத்த-இழைத்துக்கொண்டிருக்கின்ற கொடுமைகள் அடக்கு முறைகள், வன்செயல்கள் யாவும் மறைந்து—மறந்து போயின. ஜே.ஆர் ரைப்போல் ஒரு ஜனநாயகத் தலைவர் உள்ளாரா? என சவால்விடும் அளவுக்கு 'அண்ணன் அமிர்' சென்றுவிட்டார்.

இந்நிலையிலே ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுகிறது. வில்சன், நீலன், அமிர் இவர்களுக்குப் பின்னால் யூ.என். பி. புகழ்பாட கொழும்பு யாழ்ப்பாணப் பெரு முதலாளிகள் ஒருபுறம். மறுபுறம் யூ.என்.பி. ஆட்சியால் கொடுமைப்படுத்தப்பட்ட லட்சோபலட்சம் மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள், கூட்டணியின் முடிவு கலந்து கொள்வதில்லை; வாக்களிப்பதில்லை; ஒதுங்கியிருப்பது. இம் முடிவு சாதாரண தமிழ்மக்களின் அபிலாஷை அல்ல; யூ. என்.பியை ஆதரிக்கும் தமிழர்கூட்டணி முதலாளிகளின் முடிவு. ஆனால்சாதாரண மக்களின் கண்களில் மண்ணைத் தூவ இனக்கோஷங்களைக் கொண்ட அறிக்கை. அதற்கு மேல் நின்றுபிடிக்க முடியாவிட்டால் வெளிநாடுகளுக்கு தம்பதிகளாக தப்பி ஓட்டம். கூட்டணித் தலைவர்களுக்கு யூ.என்,பி.எஜமானர்களை எதிர்க்கும் முதுகெலும்பு இல்லை. இதுவரை தமிழ்த் தலைவர்களுக்கு இல்லாத முதுகெலும்பு இப்பொழுது 'மட்டும் புதிதாகமுளைக்க நியாயமில்லைத்தான். ஆனால் சாதாரணதமிழ்மக்கள்! தமதுபொது விரோதியான யூ.என்.பி.யை முறியடித்து நாட்டின் யூ. என்.பி. எதிர்ப்பு சக்திகளோடிணைவது தவிர்க்க முடியாததாகும்.

★

## சீனக் கம்யூ. கட்சிக்கு........

1-ம் பக்கத் தொடர்........

முறைப்படுத்தி வெற்றிகரமாக ஒருங்கிணைத்ததன்மூலம் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி தோழர் மாஓசேதுங்கின் தலைமையில் ஏகாதிபத்திய பிற்போக்கு ஆட்சியையும், நிலப்பிரபுத்துவத்தையும், முதலாளித்துவ அதிகார வர்க்கத்தையும் முறியடிக்கும் விட்டுக்கொடுக்காத போராட்டத்தில் சீன மக்களை வழிநடாத்தியதுடன் புதிய ஜனநாயக புரட்சியில் மகத்தான வெற்றியை ஈட்டி மக்கள்சீனக்கு குடியரசையும் உருவாக்கியது.

சீனக்கம்யூனிஸ்ட்கட்சியின் வழிநடாத்தலின் கீழ் கட்சித்தலைமையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், சோஷலிசப் பாதையும், மாக்சிச லெனினிச மாசேதுங் சிந்தனையின் கோட்பாடுகளின் அடிப்படையில் சீனமக்கள் உறுதியாகப் பின்பற்றி சீனதேசத்தை மிக உன்னத ஜனநாயகமும், உயர் நாகரீகமும் கொண்ட நவீன சக்திமிக்க செழுமைமிக்க சோஷலிச நாடாகக் கட்டியெழுப்பும் மகத்தான பணியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர்,

சோஷலிசத்தின் உண்மையான தன்மையைக் கொண்டதாக விளங்கும் சீனு, ஏகாதிபத்தியம் - காலனித்துவம் - மேலாதிக்கம் - ஆக்கிரமிப்பு - இனவாதம் ஆகியவற்றிற்கு எதிராகவும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்குமான உலகளாவிய பொதுப்போராட்டத்தில் முன்னணியில் நிற்கின்றது.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியானது, மக்களுக்கான பொறுப்புணர்வை நன்குணர்ந்து எப்பொழுதுமே மிக உறுதியாக குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டும் தவறுகளைத் திருத்திக்கொண்டும் சீனமக்களின் அபிலாசைகளுக்கமைய புரட்சியைச் சரியான பாதையில் கொண்டு செலுத்திவந்துள்ளது.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 12வது காங்கிரசானது 11 வது காங்கிரசின் பின்னர் ஈட்டியுள்ள வெற்றிகளை — அனுபவங்களை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் எதிர்கால கொள்கைகளையும் திட்டங்களையும் உருவாக்கும் என்றும் புதிய வெற்றிகளை ஈட்டுவதற்காக சீனமக்களின் சகல தேசிய இனங்களையும் ஒன்றுதிரட்டி செயல்படுத்தும் என்றும் நாம் நம்புகின்றோம்.

சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 12 வது காங்கிரசிற்கு சகல வெற்றிகளும் கிட்டட்டும்!

எமது இரு கட்சிகளுக்குமிடையிலான புரட்சிகரமான நட்புறவு ஓங்கட்டும்!

உங்கள் தோழமைமிக்க
கே. ஏ. சுப்பிரமணியம்
செயலாளர்

23 - 8 - 82

தேசிய அமைப்புக் கமிட்டி,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)

## தொண்டமானின் முடிவு துரோகத்தனமானது!

திரு. தொண்டமானும் அவரது இ.தொ.கா. தொழிற் சங்கமும் ஜனாதிபதித் தேர்தலில் யூ. என பி.யை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இந்த முடிவு தொண்டமான். செல்லச்சாமி அண்ணாமலை, ராஜு, சுப்பையா போன்ற மலையக வசதிபடைத்த வர்க்கத்தின பிரதிநிதிகளுடைய முடிவே அன்றி சாதாரண தோட்டத் தொழிலாளர்களின் முடிவு அல்ல. இந்தக் கனவான்கள் யூ.என்.பி.யை ஆதரிக்க வேண்டும் என்பதற்கு என்ன காரணங்களை தொழிலாளர்களுக்கு எடுத்துக் காட்டப் போகின்றார்கள்.

34 வருடங்களுக்கு முன்பு இதே யூ. என். பி. யும் இன்றைய ஜனாதிபதி — ஜனாதிபதி வேட்பாளரான ஜே. ஆர். ஜயவர்த்தனவும் ஒன்றிணைந்துதான் இந்திய வம்சாவழி தோட்டத்தொழிலாளர்களின் பிரஜாவுரிமையை ரதது்ச் செய்து வாக்குரிமையைப்பறித்து நாடற்றவர்கள் என்ற கேவலநிலையை உருவாக்கினார்கள். அதற்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கே இன்று யூ என்.பி.க்கு வாக்களிக்க வேண்டும் என்று தொண்டமானும் இ. தொ. கா. வும் காரணம் கூறுகிறார்களா?

கடந்த அரசாங்ககாலத்தில் இந்தப் பெரிய மனிதர்கள் முன்வைத்த சம்பளஉயர்வு பாதச்சம்பளம், ஆண் பெண் சமசம்பளம், இருப்பிடவசதி, சுகாதாரம், கல்வி போன்ற கோரிக்கைகளில் ஒன்றைத் தானும் கடந்த ஐந்து ஆண்டுகளில் யூ. என். பி. யிடம் இருந்து தோட்டத்தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ளவில்லையே! அதற்காக யூ. என்.பி.யை தோட்ட தொழிலாளர்கள் ஆதரிக்கவேண்டும் என்ற காரணத்தை கூறப் போகிறார்களா?

யூ. என். பி.யும் — ஜே. ஆர் ரும் பதவிக்கு வந்து மூன்று இனக்கலவரங்களை நடாத்தி முடித்தார்கள். இதில் இரண்டு இனக்கலவரங்களில் தோட்டத் தொழிலாளர்கள் இதுவரை காணாத இனவாத வன்செயல்களால் பாதிக்கப்பட்டனர். உயிர், அற்ப சொற்ப உடமைகள் யாவும் இழந்து வீதியில் பிச்சைக்காரர்களாகத் துரத்தப்பட்டார்களே அதற்கு இந்த யூ.என்.பி.தான் காரணம் என்று கூறி அதே கட்சிக்கு வாக்களிக்கும்படி தோட்டத் தொழிலாளர்களை கேட்கப் போகிறார்களா?

தொண்டமானுக்கு அமைச்சர் பதவி தொடக்கம், சுப்பையாவுக்கு மாவட்ட சபை உறுப்பினர் பதவிவரை இ.தொ.கா.தலைவர்களுக்கும் அவர்களது நெருங்கியவர்களுக்கும் யூ.என்.பி. அனேக சலுகைகளை உரிமைகளைக் கொடுத்திருக்கிறது உண்மைதான். ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது. மலையக உயர்வர்க்கத்திற்கு யூ. என். பி.யால் கிடைத்த சலுகையை மலையகப் பாட்டாளி வர்க்கம் பெற்றதாக எப்படிக்கூற முடியும்.

இலங்கை மக்களின் பொது எதிரியான யூ. என். பி.த் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை குறிப்பானதும் வன்மத்துடன் எதிர்க்கவேண்டிய காரணங்களைக் கொண்டதுமான பொது எதிரியாகும். அந்த எதிரிக்கு ஜனாதிபதித் தேர்தலில் தோட்டத்தொழிலாளர்கள் ஆதரவு கொடுத்தால் உதைத்தகாலை உச்சிமீது வைத்துப் போற்றுவதற்குச் சமமாகும். இதை தோட்டத் தொழிலாளர்கள் ஒருபோதும் செய்யமாட்டார்கள். தொழிலாளர்களின் முன்னுள்ள பணி யூ.என்.பி.யை தோற்கடிப்பதேயாகும்.

7-ம் பக்கத் தொடர்.....

குள் வைத்திருக்க நினைப்பதும், லெபனானைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயலுவதும் கோலான்மேட்டு நிலப்பகுதியை பலவந்தமாக அபகரித்ததும் இவைபோன்ற ஏனைய செயல்களும் 'அகண்ட இஸ்ரவேல்' திட்டத்தின்கூறுகளேயாகும் என்று பலர் கருதுகின்றனர். தனது எல்லைகளை இராணுவ பலத்தால் அகல்விப்பதே இஸ்ரவேலின் நடைமுறையாக இருந்துவந்திருக்கிறது.

இதனாலேயே எகிப்திலும் வேறு சில நாடுகளிலுமுள்ள பத்திரிகைகள் புதியதொரு ஆபத்து குறித்துப் பிரஸ்தாபிக்கத் துவங்கியிருக்கின்றன. அதாவது லெபனானில் நடப்பது போன்ற நெருக்கடிகள் வேறு சில அரபு நாடுகளிலும் தோன்றக்கூடும்; இதுபோல அமெரிக்க ஆதரவு இஸ்ரவேலுக்கு இருக்குமாகில் லெபனான் விவகாரத்தில் அரபுநாடுகள்-குறிப்பாக அமெரிக்க சார்பு அரசுகள்—வெட்கித் தலைகுனிய வேண்டிய விதத்தில் நடந்துகொண்டன என்பதை எவரும் மறுக்க இயலாது. பெற்றோல் பணம் நசிவுப்பாதையில்அரபு ஆளும் வர்க்கத்தினரைஇழுத்துச் செல்கிறது என்பதையும் நாம் காணக்கூடியதாய் இருக்கிறது. அதேவேளையில் மேலாதிக்க வல்லரசுகளின் போட்டாபோட்டியும் இந்த அவல நிலைக்கு ஏதுவாக இருக்கிறது என்பதும் சரியாகக் கவனிக்க வேண்டியதே.

அரபு நாடுகளுக்கிடையே நிலவும் முரண்பாடுகளையும் கருத்து வேறுபாடுகளையும் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, அமெரிக்காவும் சோவியத்யூனியனும் மத்தியகிழக்கிலே தமக்குக் கிடைக்கக்கூடிய செல்வாக்கின் எல்லைகளை விரிவாக்கிக் கொள்ள எல்லா வழிகளையும் கையாள்கின்றன. இப்பொழுது இருப்பதைப்போல அரபுநாடுகள் சின்னாபின்னப்பட்டு இருப்பதாயின் அடுத்து வரும் பத்தாண்டுகள் 'அரபு தேசியத்துக்கு மிகவும் ஆபத்தான காலப்பகுதி' என்று சில அவதானிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். அதேவேளையில் இத்தகைய அவமானமும் படுதோல்வியும் மக்களைத் தட்டியெழுப்பி ஒற்றுமைக்கு வழிகோலக்கூடும் எனவும் சில எகிப்தியர்கள் எண்ணுகின்றனர். என்னவாயினும், இறுதிமுடிவு வரலாற்றுப் பெருமையும் தொன்மையும் வாய்ந்த அரபுமக்களின் கையிலேயே இருக்கிறது.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். வெளியீடு; சி. நவரத்தினம் 15/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.